# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1711/26 - 2011 ජුනි 24 වැනි සිකුරාදා - 2010.06.24

*1711/26 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு யூன் மாதம் 24 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வட மத்திய மாகாண மாகாண சபை

*2009 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க வட மத்திய மாகாண சுற்றாடல் சாசனம்*

*இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் அரசியல் யாப்பில் சேர்க்கப்பட்ட XVII (அ) பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்ட 9 வது உப அட்டவணையில் 1 ஆவது பட்டியலில் (மாகாண சபை அட்டவணை) இல. 3 உருப்படியின் கீழ் உள்ள வரையறையினுள் மாகாணத்தினுள் சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக மேலே கூறப்பட்டுள்ள சாசன முன்மொழிவு 2011, பங்குனி மாதம் 8 ஆந் திகதி நடைபெற்ற மாகாண சபை அமர்வில் 2009 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க சுற்றாடல் சாசன முன்மொழிவு அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.*

*பீ. பீ. திசாநாயக்க,*
*தலைவர்,*
*வட மத்திய மாகாண மாகாண சபை.*

*தவிசாவளர் அலுவலகம்,*
*வடமத்திய மாகாண மாகாண சபை,*
*அநுராதபுரம்.*
*2011, சித்திரை 04.*

*2011 ஆம் ஆண்டு ஆனி மாதம் 03 ஆந் திகதி என்னால் உறுதிகுறிக்கப்பட்டது.*

*கருணாரத்ன திவுல்கனே,*
*ஆளுநர்,*
*வடமத்திய மாகாணம்.*

**வட மத்திய மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க வட மத்திய மாகாண சுற்றாடல் சாசனம்.**

*வட மத்திய மாகாணத்தில் சுற்றாடல் அதிகார சபை ஒன்றை அமைப்பதற்காகவும், அதன் அதிகாரம் , செயற்பாடு , கருமங்கள் சம்பந்தமான சட்ட திட்டங்களை வகுப்பதற்காகவும் , சூழலை பாதுகாக்கவும், முகாமைத்துவம் செய்யவும், அதனை அபிவிருத்தி செய்யவும் , சூழலின் தன்மையை முறைப்படுத்தவும் நடைமுறைப்படுத்தல் மற்றும் அதனை நிர்வகித்தல் போன்றவற்றிற்காக சட்டத் திட்டங்களை ஆக்குவதற்கான சாசனமாகும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வட மத்திய மாகாண மாகாண சபையினால் இவ்வாறு விதிக்கப்படுகிறது:-*

*1. 2009 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க வட மத்திய மாகாண சுற்றாடல் சாசனம் என இது அழைக்கப்படும். இது வட மத்திய மாகாண ஆளுநரினால் அனுமதிக்கப்பட்ட திகதியில் இருந்து செயற்படும்.*

**1 ஆம் பகுதி**

2. இந்த சாசனத்தின் செயற்பாடுகளுக்காக வட மத்திய மாகாண சுற்றாடல் அதிகார சபை என அழைக்கப்படும் சபையொன்று உருவாக்கப்படும். அது மாகாண சுற்றாடல் அதிகார சபையெனும் சுட்டுப் பெயரினால் அழைக்கப்படும்.

*மாகாண அதிகார சபை ஒன்று அமைத்தல்.*

2.1 இச் சாசனத்தின் காரியங்களுக்காக ''வட மத்திய மாகாண சுற்றாடல் அதிகார சபை'' என அழைக்கப்படுகின்ற அதிகாரசபையொன்று அமைக்கப்பட வேண்டும். அது மாகாண அதிகார சபை எனும் சுட்டுப் பெயரினால் இதன் பின்னர் அழைக்கப்படும்.

2.2 முதலாவது உப பிரிவின் கீழ் அமைக்கப்படுகின்ற இச்சுற்றாடல் அதிகார சபை 3ம் பிரிவின் முதலாவது உப பிரிவின் கீழ் தற்காலிக அங்கத்தவர்களை கொண்டதாக இருத்தல் வேண்டும்.

3. மாகாண சுற்றாடல் அதிகார சபை நிரந்தரமானதும் ஒழுங்கிணைக்கப்பட்ட சபையொன்றாவதோடு அப் பெயரில் வழக்குத்தாக்கல் செய்யவும் தொடரவும் முடியும்:-

(1) விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்படுகின்ற பணிப்பாளர் சபை பதினொரு (11) உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும்.

*மாகாண அதிகார சபையின் பணிப்பாளர் சபையும் செயலாளரும்.*

(அ) சூழல் சட்டம் , முகாமைத்துவம், திட்டமிடல், நிர்வாகம், சம்பந்தமான போதிய அறிவுள்ளவர்கள் ஐந்து பேர்.

(ஆ) ஏனைய உறுப்பினர்களில் ஒருவர் முதல் அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் பெயரிடுகின்ற உத்தியோகத்தர் ஒருவர்.

(இ) மாகாண சூழல் அமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் விசேடமாக பெயரிடப்படுகின்ற விசேட சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்.

(ஈ) மாகாண நிதியமைச்சின் செயலாளர் அல்லது அவரினால் விசேடமாக பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்

(உ) வட மத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் அல்லது அவரினால் பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்

*மாகாண அதிகார சபையின் தலைவரை நியமித்தல்*

(ஊ) இப் பணிப்பாளர்களில் ஒருவர் விடயப் பொறுப்பு அமைச்சரினால் மாகாண அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்படுவார்.

*மாகாண அதிகார சபையின் செயல்படு பணிப்பாளர் ஒருவரை நியமித்தல்.*

(எ) இப் பணிப்பாளர்களில் ஒருவர் விடயப் பொறுப்பு அமைச்சரினால் செயல்படு பணிப்பாளராக நியமிக்கப்படுவார்.

(ஏ) நோயடைவது அல்லது வேறு குறைபாடுகள், ஏதேனும் வெளிநாடு செல்லல், அல்லது வேறு ஏதேனும் ஒரு காரணத்திற்காக மாகாண அதிகார சபையின் தலைவர் அவருடைய பதவியின் கருமங்களை நிலைநாட்ட முடியாமல் போகும் சந்தர்ப்பமொன்றில் தலைவராக பதில் கடமை புரிவதற்காக பணிப்பாளர் சபையில் ஒருவரை விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்க முடியும்.

(2) மாகாண அதிகார சபையின் தலைவர் கலந்து கொள்ளும் மாகாண அதிகார சபையின் சகல கூட்டங்களிலும் தலைமைத்துவம் வகித்தல் வேண்டும். மாகாண அதிகார சபையின் ஏதேனும் கூட்டமொன்றில் கலந்து கொள்ளாதவிட த்து அக் கூட்டத்திற்கு வருகை தந்துள்ள உறுப்பினர்களால் அவர்களுக்குள் ஒருவரை தெரிவு செய்து, தெரிவு செய்யப்படுபவர் தலைமைத்துவம் வகித்தல் வேண்டும்.

(3) ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு முறை மாகாண சுற்றாடல் அதிகார சபை கூடுதல் வேண்டும்.

(4) மாகாண சபையின் ஏதேனும் ஒரு கூட்டத்தில் தலைமை வகிப்பவருக்கு அல்லது பணிப்பாளருக்கு அவருடைய வாக்குக்கு மேலதிகமாக தீர்மானிக்கப்படும் வாக்கு ஒன்று இருத்தல் வேண்டும்.

(5) விடயப் பொறுப்பு அமைச்சரின் ஆலோசனையின் படி மாகாண சுற்றாடல் அதிகார சபையின் தலைவரினால் அதன் அதிகார செயலாளராக இச் சாசன சட்ட விதிகளின் படி நியமிக்கப்படுகின்ற பொது முகாமையாளர் அல்லது அவருடைய பொறுப்புக்களை வகிக்கின்ற உத்தியோகத்தர் நியமிக்கப்பட வேண்டும். மாகாண அதிகார சபையின் செயலாளரைத் தெரிவு செய்தல்.

(6) மாகாண அதிகார சபையின் கோரம் 5 உறுப்பினர்களை கொண்டதாக இருத்தல் வேண்டும். மாகாண அதிகார சபை கூட்டமொன்றின் கோரம்.

(7) மாகாண சுற்றாடல் அதிகார சபையின் அங்கத்துவத்தில் ஏதேனும் வெற்றிடம் இருந்தாலும் அதனை கவனத்திற் கொள்ளாது மாகாண அதிகார சபைக்கு செயல்பட முடிவதோடு அதிகார சபையின் அங்கத்துவத்தில் வெற்றிடம் நிலவுவது அல்லது அங்கு அங்கத்தவர் ஒருவரை நியமிப்பதில் அல்லது பெயரிடுவது என்பதில் ஏதேனும் குறைபாடு நிலவுவது காரணமாக மட்டும் மாகாண அதிகார சபையின் ஏதேனும் செயல்பாடு அல்லது கருமங்கள் அதிகாரமற்றதாகி விடாது. அதிகார மற்றதாக கருதப்படவும் கூடாது.

(8) மாகாண சுற்றாடல் அதிகார சபையின் தலைவருக்கு, செயல்படு பணிப்பாளருக்கு, பணிப்பாளர் சபைக்கு, ஏதேனும் பணிப்பாளர் ஒருவருக்கு, செயலாளருக்கு விடையப்பொறுப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டின் அடிப்படையில் நிச்சயப்படுத்தப்பட முடியுமான சிரமக் கொடுப்பனவுகள் அல்லது வேறு செலவினங்கள் மாகாண அதிகார சபையின் நிதியிலிருந்து வழங்க முடியும். பணிப்பாளர் சபையின் செயலாளரின் கொடுப்பனவு.

(9) இச் சாசனத்தின் சட்ட விதிகளுக்குட்பட்டு மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் குழு கூட்டங்களுடன் தொடர்பு கொண்டு செயல்படும் முறைகள் சம்பந்தமான செயல் விதிகளுக்கு பொருத்தமாக அதிகார சபையினால் செயல்படுமுறை ஆக்கப்பட வேண்டும். சட்டமாக்கல்.

4. (1) மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பதவி முத்திரை செயலாளரின் பொறுப்பில் இருத்தல் வேண்டும்.

(2) மாகாண சுற்றாடல் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற முறையில் மாகாண சுற்றாடல் அதிகார சபையின் முத்திரை தயாரிக்கப்படவும் அல்லது மாற்றம் செய்யவும் முடியும்.

(3) மாகாண சுற்றாடல் அதிகார சபையின் தலைவரின் அல்லது அங்கத்தவர் ஒருவரின் முன்னிலையில் தவிர ஏதேனும் காரணம் ஒன்றிற்கு அல்லது பட்டியல் ஒன்றிற்கு அதிகார சபையின் பதவி முத்திரையை இடப்படல் அத்துடன் தான் அந்த சந்தர்ப்பத்தில் வந்திருந்ததாக சாட்சியாக தலைவர் அல்லது வந்திருந்த அங்கத்தவர் அக் குறிப்புப் பத்திரத்தில் அல்லது சாதனை பட்டியலில் கையொப்பமிடல் வேண்டும். மாகாண அதிகார சபையின் பதவி முத்திரை.

5. (1) மாகாண அதிகார சபைக்கு அதிகார சபைக்கான நிதியமொன்று இருத்தல் வேண்டும். அந் நிதியத்திற்கு - மாகாண அதிகார சபையின் நிதியம்.

(அ) வட மத்திய மாகாண சபையினால் சுற்றாடல் கருமங்களுக்காக நிறைவேற்றப்படுகின்ற அல்லது வழங்கப்படுகின்ற சகல நிதியும்,

(ஆ) மாகாண அதிகார சபையின் அதிகாரங்கள் செயல்படுத்தப்படும் போது கருமங்களை நிறைவேற்றிக் கொள்ளும் போது அதிகார சபைக்கு கிடைக்கின்ற சகல நிதியும்,

(இ) இலங்கை அரசாங்கத்தின் அனுமதியின் பேரில் இலங்கைக்கு வெளியே ஏதேனும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் கடன்கள் அன்பளிப்புக்கள் அல்லது வழக்கு மூலமாக அதிகார சபைக்கு கிடைக்கும் சகல நிதியும்.

(ஈ) மாகாண அதிகார சபையின் அதிகாரங்களை செயல்படுத்தும் போது தண்டப் பணமாகவும் கட்டணமாகவும் அல்லது வரவாகப் பெறப்படுகின்ற சகல நிதிகளும் கணக்கில் இடப்படல் வேண்டும்.

(2) மாகாண அதிகார சபையின் அதிகாரங்களை செயல்படுத்தும் போது மாகாண அதிகார சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஏதேனும் செலவினம் அல்லது கொடுப்பனவு என்பன மாகாண அதிகார சபையினால் பொறுப்பேற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(3) மாகாண அதிகார சபையின் ஆரம்ப மூலதனம் 50 இலட்சம் ரூபாவாக இருக்க வேண்டியதுடன் அது வட மத்திய மாகாண சபை நிதியிலிருந்து மாகாண அதிகார சபையின் நிதியத்தின் கணக்கில் வரவிடப்பட வேண்டும்.

மாகாண அதிகார சபையின் நிதியாண்டும் கணக்குப் பரிசோதனையும்.

06. (1) மாகாண அதிகார சபையின் நிதி வருடம் ''லித்'' வருடமாக இருக்க வேண்டும்.

(2) மாகாண அதிகார சபையினால் அதிகார சபையின் செலவுகள் சொத்து பொறுப்புக்களுடன் வேறு கணக்கு வழக்குகள் சம்பந்தப்பட்ட முறையான கணக்கு புத்தகங்கள் வைக்கப்படல் வேண்டும்.

(3) கணக்காளர் நாயகத்தினால் சகல வருடங்களிலும் மாகாண அதிகார சபையின் கணக்கு பரிசீலனை செய்யப்படல் வேண்டும்.

4.மாகாண அதிகார சபையின் கணக்கு பரிசீலனையின் பின்னர் கணக்காளர் நாயகத்தினால் அல்லது அவருக்கு பதிலாக வடமத்திய மாகாணத்துக்குரிய அரச உத்தியோகத்தரினால் வட மத்திய மாகாண சபையிடம் ''லித்'' வருடத்தின் முடிவில் மேற்பார்வை அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

மாகாண சுற்றாடல் ஆலோசனை சபை.

7.1 ஆலோசனை சபை எனக் குறிப்பிடப்படுகின்ற மாகாண சுற்றாடல் ஆலோசனை சபை அமைக்கப்பட வேண்டுவதுடன் அது விடயப் பொறுப்பு அமைச்சரின் ஆலோசனைப் படி அவ்வமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்ற கீழே காட்டப்படுகின்றவர்களில் அங்கத்தவர் தொகையைக் கொண்டதாக இருக்க வேண்டும்:-

(அ) மாகாண சபை அந்தந்த அமைச்சுக்களின் செயலாளர்கள் அல்லது மாகாண அமைச்சின் செயலாளரினால் பெயர் குறிப்பிடப்படுகின்ற அவ்வமைச்சின் வேறு சிரேஷ்ட உத்தியோகத்தர்;

(ஆ) வட மத்திய மாகாண மாகாண சபை பிரதேச செயலாளர்;

(இ) சுற்றாடல் இயற்கை வள அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்;

(ஈ) காலநிலை விஞ்ஞானத் திணைக்களப் பொறுப்பு அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்;

(உ) தேசிய பௌதீகவியல் திட்டமிடல் திணைக்களப் பொறுப்பு அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்;

(ஊ) விவசாய விவசாய சேவை திணைக்களப் பொறுப்பு அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர்;

(எ) புதைபொருள் திணைக்கள வட மத்திய மாகாண மாவட்டப் பொறுப்பு உத்தியோகத்தர் அல்லது அவர்களின் விசேடமாக பெயரிடுகின்ற இரு சிரேஷ்ட உத்தியோகத்தர்;

(ஏ) தேசிய வைத்திய அமைச்சுப் பொறுப்பு சிரேஷ்ட உத்தியோகத்தர்;

(ஐ) வட மத்திய மாகாண உள்ளூராட்சி செயலாளர் அல்லது அவரினால் விசேடமாகப் பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்;

(ஒ) வட மத்திய மாகாண காணி ஆணைக்குழு அல்லது அவரினால் விசேடமாகப் பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்;

(ஓ) இலங்கை மகாவலிப் பொறுப்பு அமைச்சின் சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்;

(ஔ) நீர்வாழ் உயிரினங்கள் உற்பத்தி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண முகாமைத்துவ பணிப்பாளர் அல்லது அவரினால் விசேடமாக பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்;

(க) நகர அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் அல்லது அவரினால் விசேடமாக பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்;

(கா) இலங்கை மின்சார சபையின் வட மத்திய மாகாண மாகாண பிரதி பொது முகாமையாளர் அல்லது அவரினால் விசேடமாக பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்;

(ச) தேசிய நீர்வடிகால் நீர் வழங்கல் சபையின் வட மத்திய மாகாண மாகாண பிரதி பொது முகாமையாளர் அல்லது அவரினால் விசேடமாக பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவர்;

(ஜ) புவியியல் விஞ்ஞான சுரங்க தொழிற் துறை வட மத்திய மாகாண மாவட்ட பொறுப்பு உத்தியோகத்தர்கள் அல்லது அவரினால் விசேடமாக பெயரிடப்படுகின்ற சிரேஷ்ட உத்தியோகத்தர்கள்;

(ட) அரச மாகாண சபையின் அல்லது வேறு நிறுவனமொன்றின் தலைவர்கள் (உரிய உத்தியோகத்தரின் நிபுணத்துவ அறிவு தேவையென விடயப் பொறுப்பு அமைச்சர் கருதுகின்ற விசேட சந்தர்ப்பத்தில்)

(டா) அரச அல்லது அரச யாப்பமைக்கப்பட்ட நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படும் போது உரிய அமைச்சின் ஒருமைப்பாட்டில் அது செய்யப்பட வேண்டும்.

மாகாண அதிகார சபையின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், காரியங்கள் சம்பந்தமான காரணங்கள் சம்பந்தமாக மாகாண அதிகார சபையின் பொது ஆலொசனை வழங்குதல் , மாகாண அதிகார சபையினால் ஆலோசனை சபைக்கு கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட ஏதேனும் காரணங்கள் சம்பந்தமாக பரிசீலனை செய்து மாகாண அதிகார சபைக்கு அறிக்கைப்படுத்தலோடு அது சம்பந்தமாக தேவையான சிபாரிசுகளையும் ஆலோசனைகளையும் சிபாரிசு சம்பந்தமாக தீர்மானம் எடுப்பது அதிகார சபைக்கு உரியதாகும்.

7.2 மாகாண அதிகார சபையின் ஆலோசனை சபையின் உறுப்பினர்களுக்கு நிதி விடயப் பொறுப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் மாகாண அதிகார சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் சிரமக் கொடுப்பனவு அல்லது கொடுப்பனவுகள் மாகாண அதிகார சபையின் நிதியத்திலிருந்து வழங்கப்பட வேண்டும்.

8.1 எவரேனும் ஒருவர் - *மாகாண அதிகார சபையின் அல்லது ஆலோசனை சபையில் உறுப்பினராக இருக்க தகுதியற்றமை.*

(அ) பாராளுமன்றத்தில் அல்லது மாகாண சபையில் அல்லது உள்ளூராட்சி சபையொன்றில் மந்திரி ஒருவராக சபை உறுப்பினராக இருப்பின் அல்லது,

(ஆ) விடயப் பொறுப்பு அமைச்சரினால் நீக்கப்பட்டால் அல்லது இடமாற்றத்தினால் அல்லது வேறு காரணத்தினால் அல்லது

(இ) அங்கத்தவர் ஒருவராக நியமிக்கப்படுவதற்கு காரணமாக அமைந்த தமக்கு உரிய உத்தியோகக் கடமைகள் இடமாற்றமொன்று அல்லது வேறேதேனும் காரணத்தினால் மாற்றமுறுமானால் அவர் மாகாண அதிகார சபையின் அல்லது ஆலோசனை சபையின் அங்கத்தவராக இருப்பதற்கு தகுதியற்றவராவார்.

(ஈ) 3.1வது பிரிவிற்கமைய மாகாண அதிகார சபைக்கு அல்லது 7.1 பிரிவிற்கமைய ஆலோசனை சபைக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் ஒரு அங்கத்தவருக்கு அங்கத்துவ கால விதிக்கமைய தகுதியற்றவரல்லாதவரானால் நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட காலங்களுக்கு பதவி வகிக்க முடியும்.

(உ) எவரேனும் ஒரு அங்கத்தவர் நியமிக்கப்பட்டதன் முன்னர் மூன்று வருடங்கள் முடிவதற்கு முன் 8.1. பிரிவில் தகுதியற்றவரானால் அவர் மூன்று வருடங்கள் நிறைவடையும் வரையான காலம் பூர்த்தியடையும் வரை மட்டும் அதிகாரம் பெறும் அடிப்படையில் அவருக்காக உரிய முறையில் பிரிவில் 3.1 அல்லது 7.1 பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் வேறு ஒருவரை உரிய முறையில் விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட முடியும்.

அங்கத்தவர் ஒருவரின் பதவிக்காலம் முடிவது அதன் கருமங்களுக்கு பாதிப்பு இல்லையென.

8.2 ஏதேனும் அங்கத்தவர் அல்லது அங்கத்தவர் கூட்டம் அல்லது பதவிக் காலம் முடிவடைந்தவுடன் மட்டும் அங்கத்தவர் நியமிக்கப்படுவதால் குறைபாடு இருக்கும் காரணத்தினால் மாகாண அதிகார சபை அல்லது ஆலோசனை சபை செயற்பாடுகளுக்கு தடைகள் அல்லது அதிகாரம் அற்றுபோதல் நடைபெறக் கூடாததோடு அதன் செயற்பாடுகள் தொடராக நடைபெறுதல் வேண்டும்.

9. மாகாண அதிகார சபையினால் இச்சாசனத்தின் கீழ் சுயாதீன அதிகாரங்களை செயற்படுத்தும் போது விடயப்பொறுப்பு அமைச்சரினால் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற கட்டளைகளுக்கும் ஆலோசனை களுக்கும் இனங்க செயல்பட வேண்டும்.

10. (□) வட மத்திய மாகாணத்தின் சகல உள்ளூராட்சி நிறுவனத்தலைவர்களின் பங்குபற்றலுடன் பிரதேச சுற்றாடல் அதிகார சபை செயற்பட வேண்டும்.

(□□) இந்த சுற்றாடல் அதிகார சபை தற்போது இருக்கும் அதிகாரத்திற்கு மேலதிகமாக மாகாண சுற்றாடல் அதிகார சபையினால் முன்வைக்கப்படும் மேலதிக அதிகாரங்கள் , கடமைகள் , அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

## II ஆம் பகுதி

11. மாகாண அதிகார சபையினால் இச்சாசனத்திற்குட்பட்டு சுய அதிகாரத்தை செயற்படுத்தும் போது விடயப்பொறுப்பு அமைச்சரின் ஆலோசனைப்படி அவ்வமைச்சின் செயலாளரினால் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்ட விதிகளுக்கமைய செயல்படுதல் வேண்டும் :-

(அ) இச் சாசனத்தின் சட்ட திட்டங்களையும் அதனடிப்படையில் செய்யப்படுகின்ற கட்டளைகளையும் செயல்படுத்துதல்.

(ஆ) மாகாண எல்லைக்குள் சூழல் பாதுகாப்புக்காக தேவையான மண் பாதுகாப்பு , வன பாதுகாப்பு , வாயுக்கள், நீர் மேட்டு நிலம் மாசடைவதை தடுப்பது சம்பந்தமாக தேவையான திட்டமிடல் வாயுக்கள் நீர் மேட்டு நிலங்களை பயன்படுத்தும் போது பாதுகாக்க வேண்டிய வாயுக்கள் , நீர், மேட்டுநிலம் எல்லையை வேறுப்படுத்தி திட்டமிடல் எனும் காரணங்கள் சம்பந்தமாக தேவைப்படுகின்ற திருத்தங்கள் அல்லது விதிகளை தயாரித்தலுக்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் ஆலோசனைக்கமைய யாப்பு திருத்தங்களை அல்லது விதிகளை தயார் செய்து முன்வைத்தல்.

(இ) சூழல் மாசடைதல் உண்டாவதன் காரணமாக அதன் தன்மை அளவு அதை தடுப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கை சம்பந்தமான பரிசீலனையும் ஆய்வும் செய்வது அல்லது அது சம்பந்தமான விடயப் பொறுப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் பரிசீலனை அல்லது ஆய்வுச் சபையை நியமித்தல், மாகாண அதிகார சபையின் கருமங்களை நடைமுறைப்படுத்திக் கொள்வதில் உதவி செய்யக் கூடிய குழுக்களை நியமித்தல்.

(ஈ) சூழலை மிகப் பிரயோசனமாக பயன்படுத்திக் கொள்வதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும் அந் நிலமையை நடைமுறைப் படுத்தி செல்வதற்காக தர நியாயங்கள் உபாயங்களோடு நியமங்களை உறுதிப்படுத்திக் கொள்ள கட்டளையிடல்.

(உ) சூழல் பாதுகாப்பு முகாமைத்துவத்துக்காக உரிய புத்தகங்கள் எழுத்தாவண அறிக்கைகள் , தகவல்கள் அறிவித்தல்கள் ஆகியவற்றை வெளியிடல்.

(ஊ) இவ் வட மத்திய மாகாண சூழல் சாசனத்திற்கும் அதன் கீழ் செய்யப்படுகின்ற சட்ட விதிகளுக்கமைய செயற்படுகின்றதா என பார்த்துக் கொள்வதற்காகவும் ஆய்வுகள் பரிசீலனைகளை நடாத்துவதற்காகவும் அச் சட்ட திட்டங்களை மீறியுள்ளனர் என கிடைக்கும் முறைபாடுகள் சம்பந்தமாக ஆய்வுகள் , பரிசீலனைகளை நடாத்துதல்.

(எ) மேலே சொல்லப்பட்ட ஊ எழுத்து பிரிவின் கீழ் ஆய்வுகள் பரிசீலனைகள் நடாத்துவது சம்பந்தமாக பயன்படுத்தும் முறைகள் சட்டத்திட்டங்களை தீர்மானிப்பதோடு அதற்கு தேவையான நபர்களை உத்தியோகத்தவர்களாக அல்லது மாகாண அதிகார சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற எவரேனும் ஒருவரை ஈடுபடுத்தல்.

(ஏ) சூழலை பாதுகாப்பது , அபிவிருத்தி செய்வது சம்பந்தமாக பொதுமக்களுக்கு தகவல்களையும் கல்வியையும் பெற்றுக் கொடுத்தல்.

(ஐ) சூழல் , பாதுகாப்பு முகாமைத்துவம் சம்பந்தமாக வேறு தேசிய அல்லது வெளிநாட்டு இயக்கங்களோடு தொடர்புகளை ஏற்படுத்துதல். நடைமுறைப்படுத்தி செல்லலோடு கல்வி பரிமாற்ற வேலைத்திட்டங்களை ஏற்படுத்திக் கொள்ளல்.

(ஒ) சூழல் பாதுகாப்பு முகாமைத்துவம் தொடர்பாக நீண்ட கால குறுகிய கால திட்டங்களை தயாரிப்பதோடு சூழல் பாதுகாப்புக்காக பொது மக்களையும் நிறுவனங்களையும் ஊக்கப்படுத்துவதற்கு தேவையான விதிமுறைகளை தயார் செய்தலும் செயற்படுத்தலும்.

(ஓ) சூழலில் கழிவுப் பொருட்கள் மாசடைந்த பொருட்கள் வருவதை தடுப்பதற்கும் சூழல் தன்மையை பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் உரிய சகல செயல்களையும் திட்டமிடலுடன் செயல்படுத்துதல்.

(ஔ) வட மத்திய மாகாண எல்லைக்குள் ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனமொன்றின் நிர்வாக எல்லையின் உள்ளே சூழல் பாதுகாப்பு சம்பந்தமாக ஏதேனும் சிபாரிசுகளை செயற்படுத்துமாறு அவ் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு பணிப்பதுடன் கீழே காட்டப்படும் பகுதிகள் சகலதும் அல்லது ஏதேனும் ஒரு பகுதி சம்பந்தமாக ஏதேனும்

(i) குப்பை கூலம் , மலசலம் அல்லது வேறு கழிவுப் பொருட்கள் அனுமதியின்றி கடத்துதல் , அகற்றுதல் வெளியேற்றுதல் அல்லது சேகரித்தல் அல்லது தடைசெய்வதோடு அக் கருமங்களுக்கான முகாமைத்துவ கட்டளைகளை விதித்தல்

(ii) மண், காற்று , வாய்க்கால் வழிகள் அல்லது நீர் வழிகளை நோக்கி சுத்தப்படுத்தப்படாத சிறுநீர், கூலங்கள், வேறு கழிவுப் பொருட்கள் , கைத்தொழில் விவசாய இரசாயனப் பொருட்கள் , காபன் புகை அல்லது சூழலுக்கு மக்கள் சுகாதாரத்திற்கு விரும்பத்தகாத கழிவுப் பொருட்களுக்கான கறுப்பு கலந்த வாயுக்கள் அல்லது புகையை அகற்றுதல் அல்லது வெளிப்படுத்துவதற்கு வசதியளித்தலை தடுத்தல். தடை செய்தல் அச் செயலில் முகாமைத்துவக் கட்டளைகளை விதித்தல்.

(iii) சுவர்கள் , கட்டடங்கள் , வேறு அனுமதி பெறாத இடங்கள் பிரதான பாதைகளில் அறிவித்தல் பத்திரங்களை காட்சிப்படுத்தலை தடை செய்தலோடு பிரசார அறிவித்தல் பலகைகளை அமைக்கும் கருமங்களை நெறிப்படுத்தல்.

(iv) அழகிய காட்சிகளை கொண்ட இடங்கள் , அரச சொத்துக்கள் வரலாற்றுப் புதைப் பொருட்களை அவலட்சனம் செய்தலை தடுத்தல்.

(v) வாயுக்கள் , சத்தங்கள் , புவியியல் மாசடைவினை கட்டுப்படுத்துவதோடு அச் செயல்பாடுகளுக்கான முகாமைத்துவ கட்டளைகளை விதித்தல்.

(vi) சுகாதாரத்திற்கும் சூழலுக்கும் மாசு ஏற்படுத்தக் கூடிய ஏதேனும் பொருட்களை களஞ்சியப்படுத்தல் போக்குவரத்துச் செய்தல், கடத்துதல் என்பவற்றை தடை செய்தலும் அது சம்பந்தமான கட்டளைகளை பிறப்பித்தல்.

(vii) பாதை இரு பக்கங்களிலும் அல்லது பூங்காக்களிலும் மரக் கூட்டங்களில் அல்லது வேறு பொது இடங்களில் அல்லது நாட்டப்பட்டுள்ள , நாட்டப்பட்டிருக்கின்ற செடி அல்லது மரங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதை தடுப்பதற்கும் அவற்றை பாதுகாப்பதற்கும் , அலங்காரப் படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்துவதற்கும் சட்டத்திட்டங்களை வகுத்தல், பாதுகாப்பதற்காக ஊக்கப்படுத்துவதற்காக முன் வைக்கப்பட்ட சிபாரிசு அல்லது முன் மொழிவுகளை செயற்படுத்துவதும் அவற்றை முகாமைத்துவம் செய்ய கட்டளை இடலும்.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கட்டளை இடும் அதிகாரம்

11 (1) மாகாண அதிகார சபையினால் ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனமொன்றின் எல்லைக்குள் சூழலை பாதுகாத்தல், காப்புச் செய்தல் , அபிவிருத்தி செய்தல் அல்லது முன்னேற்றுதல் தேவையென கருதும் போது மாகாண அதிகார சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் கருமங்கள் அல்லது விடய மொன்று செய்யப்பட வேண்டுமென அல்லது செய்விக்கப்பட வேண்டும் என விசேட அல்லது சாதாரண கட்டளைகளை எழுத்து மூலம் வெளியிட முடியும்.

(2) அப்படிப்பட்ட ஏதேனும் கட்டளையொன்று பிறப்பிக்கப்படும் இடத்து உள்ளூராட்சி நிறுவனம் அச்சட்டங்களுக்கமைய செயல்படுதல் வேண்டும்.

## III ஆம் பகுதி

### மாகாண அதிகார சபையின் பணியாளர் சபை

பொது முகாமையாளர்.

12. (1) (அ) மாகாண சுற்றாடல் அதிகார சபையின் பொது முகாமையாளர் என சூழல் பொது முகாமையாளர் விடயப் பொறுப்பு அமைச்சரினால் நியமிக்கப்பட வேண்டும். சுற்றாடல் முகாமைத்துவம் / தாவரவியல் / விலங்கியல் / விவசாய விஞ்ஞானம் / புவியியல் தொடர்பான இலங்கையில் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டத்தை அல்லது தொழிற்தகமை பெற்றுள்ள ஒருவர் நியமிக்கப்பட வேண்டும். (மேல் உள்ள தகமையை கொண்ட அரச சேவையாளரொருவர் சேர்த்துக்கொள்ளப்படவோ அல்லது இணைக்கப்படவோ முடியும்.)

மாகாண அதிகார சபையின் பிரதான உத்தியோகத்தர்.

2. (அ) மாகாண அதிகார சபையின் தலைவர் பிரதான நிறைவேற்று அதிகாரமுடையவர் தலைவராவதோடு அதிகார சபையின் செயல்பாடுகளை வழிநடத்துதல் அமைப்புச் செய்தல் செயல்படுத்துவதுடன் அதிகார சபையின் சேவையாளர்களின் பரிபாலனம் , நிர்வாகம் , தலைவருடைய பொதுவான கட்டளைகளுக்கும் நிர்வாகத்திற்கும் நிறைவேற்று உட்பட்டதாக பொது முகாமையாளருக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும்.

பொது முகாமையாளர் அவர்களுக்கான கொடுப்பனவு.

(ஆ) அது சம்பந்தமாக மாகாண அதிகார சபையினால் 13(2) பிரிவிற்கு உட்பட்டு தீர்மானிக்கப்படுகின்ற பொருத்தமான சிரமக் கொடுப்பனவு அவருக்கு வழங்கப்பட வேண்டும்.

பொது முகாமையாளர் செயலாளருக்கு வாக்குரிமையை பாவிக்க முடியாது என:

(இ) மாகாண அதிகார சபையின் பொது முகாமையாளர் செயலாளராக செயல்படுவார். அவருக்கு மாகாண அதிகார சபையின் மற்றும் ஆலோசனை சபையின் கூட்டங்களுக்கு கலந்து கொள்ளும் உரிமையுள்ளதாயினும் கூட்டங்களில் வாக்குரிமையை கூட்டமொன்றில் பாவிக்க உரிமை இல்லாதிருத்தல் வேண்டும்.

(ஈ) மாகாண அதிகார சபை ஆலோசனை சபையின் செயலாளரின் பதவிக் காலம் அவர் சுய உத்தியோகப் பதவியை வகிக்கும் வரை அதிகாரம் கொண்டதாக இருக்கும்.

ஏனைய பணியாளர் குழு.

13. (1) வினைத்திறன் உடனான மாகாண அதிகார சபையின் அதிகாரங்களை செயல்படுத்துவது கருமங்களை நிலைநாட்டுவதற்காக அவசியம் என குழு கருதும் மாகாண அதிகார சபையில் தீர்மானிக்கப்படுகின்ற அதிகார சபையின் செயற்பாடுகளை இணைப்புச் செய்வதற்காக மாகாண இணைப்பாளர் , பிரதேச இணைப்பாளர்களோடு சூழல் செயற்பாடுகளுக்கு பொருத்தமான விசேட அறிவைக் கொண்ட ஆலோசகர்களோடு ஏனைய செயற்பாடுகளுக்கு சபைக்காகவும் தேவையான உத்தியோகத்தர்கள் சேவையாளர்களின் அதிகார சபையின் மூலம் தீர்மானிக்கப்படுகின்ற ஆட்சேர்ப்பு முறைகளுக்கு அமைவதாக நியமிக்கப்பட முடியும்.

(2) மாகாண அதிகார சபையினால் விதிக்கப்படுகின்ற கட்டளைகளின் மூலம் நிச்சயிக்கப்படுகின்ற ஆகக் குறைந்தளவிற்கு ஏற்ப தீர்மானிக்கப்படுகின்ற சிரமக் கொடுப்பனவு அல்லது கொடுப்பனவுகள் அந்த பணியாளர்களுக்கு வழங்கப்படல் வேண்டும்.

(3) மாகாண அதிகார சபையின் வேண்டுகோளின் பெயரில் அரச உள்ளூராட்சி அல்லது மாகாண சபை உத்தியோகத்தர் ஒருவருக்கு அல்லது சேவையாளர் ஒருவருக்கு அந்த சேவையாளர்களுக்கு உரிய அதிகாரியின் அனுமதி அல்லது விடுவித்தலின் பெயரில் மாகாண அதிகார சபையினால் நிச்சயிக்கப்படுகின்ற காலத்திற்காக தற்காலிகமாக அல்லது இடைக்கால நியமன முறைப்படி அல்லது இணைப்பு முறைப்படி நிரந்தர பணியாளர் சபைக்கு நியமிக்க முடியும்.

(4) மாகாண அதிகார சபையின் சேவைக்கு தற்காலிகமாக நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் , சேவையாளர் மாகாண அதிகார சபையின் ஒழுக்க நிர்வாகத்திற்கு உட்படுதல் வேண்டும்.

## IV ஆம் பகுதி

### சூழல் முகாமைத்துவம்

14. மாகாண அதிகார சபையினால் ஆலோசனை சபையின் கருத்துக்களை கேட்டு மாகாண சபை எல்லைக்குள் காணிகளை சிறப்பாக பயன்படுத்தல் முறையொன்றை கீழே காட்டப்பட்டுள்ள குறிக்கோள்களுக்கு பொருந்தக்கூடியதாக தயார் செய்து கீழே விடயப் பொறுப்பு அமைச்சருக்கு சிபாரிசு செய்தல் வேண்டும்:-

(அ) காணிகளில் உயர் பிரயோசனத்தை பெற்றுக் கொள்வதற்காக காணிகள் அவற்றின் வளங்கள் அதிகாரங்களை பெற்றுக் கொள்ளல், பயன்படுத்திக் கொள்ளவும் , அகற்றவும் முறையானதும் வினைத்திறனுடையதுமான திட்டமொன்றை தயார் செய்தல்;

(ஆ) சேரிப்புறக் காணி, பயிரிடப்படாத காணி, கைவிடப்பட்டு அல்லது கவனிக்கப்படாமல் உள்ள காணி சிறந்த நடைமுறைப்படுத்தலுடன் அல்லது மிகவும் பிரயோசனமாக பாவனைக்குட்படாத காணி சம்பந்தமாக நிபந்தனைகளை அல்லது கட்டளைகளை விதித்தல்;

(இ) மாகாணத்தின் தேவைப்பாடுகளுக்கும் காணி வளங்களுக்கும் சமமில்லாத ஒரு நிலையை தவிர்ப்பதற்காக அந்த வளங்களை மிகவும் முறைப்படி பயன்படுத்துதலும் பாதுகாத்தலும்;

(ஈ) அந்த இடங்களில் கிராமங்களில் அல்லது பிரதேசங்களில் பயிரிடப்பட வேண்டிய பயிரினங்களை தீர்மானித்தல்.

15. 14 ஆ ஆம் பிரிவிற்கு உட்பட்டு ஆக்கப்பட்ட காணியை முகாமைத்துவம் செய்கின்ற கீழே தரப்படுகின்ற விடயங்கள் உடட்படுதல் வேண்டும் :- காணியை பயன்படுத்தும் முறைகள்

(அ) விஞ்ஞான முறையில் வகைப்படுத்தல் முறையும் காணி வகைப்படுத்தல் பட்டியல் ஒன்றும்;

(ஆ) நிகழ்காலத்தில் காணியை பயன்படுத்திக் கொள்ளல் , அந்த காணிகள் பிரயோசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அளவு பற்றாக்குறை பிரயோசனத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட அளவு செயல் இழந்த அல்லது கைவிடப்பட்ட அளவு;

(இ) சமூக அபிவிருத்திக்கு , விவசாயத்திற்கு , கைத் தொழில் செயற்பாடுகளுக்கும் , வணிக செயற்பாடு களுக்கும் அத்தோடு வதிவுக்கான இடத்தை பயன்படுத்திக் கொள்ளும் இயலுமை சம்பந்தமாக பிழையின்றியும் விபரமாகவும் தீர்மானித்தல்;

(ஈ) பரிபாலனம் தவிர்ந்த அபிவிருத்தி செயல்பாடுகளுக்கும் வேறு காரியங்களுக்கும் பயன்படுத்தும் போது பாதிப்புக்கள் ஏற்படக் கூடிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கலாசார அழகியல் பெறுமதியுள்ள அல்லது அந்த இடங்களை அபிவிருத்தி செய்வதினால் சூழல் பாதுகாப்பிற்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய காணிகளை பிரதேசங்களை இணங்காணல்.

(உ) சூழல் பரிபாலனத்திற்கு அவசியமென கருத முடியுமான பிரதேசங்களில் காணிகளை பயன்படுத்துவது மாகாண சபையினால் நிர்வகிப்பதற்கான முறை ஒன்று;

(ஊ) மக்களை குடியமர்த்த கிராமங்களை விசாலப்படுத்துவதற்காக புதிய பிரதேசங்களை தெரிவு செய்து கொள்ள அப்பிரதேசத்தினுள் அதன் அயல் இடங்களை பயன்படுத்திக் கொள்வது சம்பந்தமாக உரிய நிர்வகித்தல் விதி முறைகளை உறுதிப்படுத்துவதற்கான கொள்கை ஒன்று.

**இயற்கை வளங்கள்:**

இயற்கை வளங்கள் முகாமைத் துவமும் பாதுகாப்பும்.

16. மாகாண இயற்கை வளங்களிலிருந்து உரிய இலாபங்களை பெற்றுக் கொள்வதற்காகவும் அவற்றை எதிர்கால பரம்பரையினருக்கு பாதுகாத்து வைப்பதற்காகவும் அவ் இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்தல் பாதுகாப்பு செய்வதற்காக அடிப்படை கொள்கை ஒன்றையும் அக் கொள்கையில் வினைத்திறனுடனான செயற்பாட்டிற்கு கொண்டு வருவதற்காக செயல் முறைகள் சம்பந்தமாக அம் மாகாண அதிகார சபையினால் பாதுகாப்பும் ஆலோசனை சபையின் கருத்துக்களை கேட்டு விடயப் பொறுப்பு அமைச்சருக்கு சிபாரிசு செய்தல் வேண்டும். அதனடிப்படையில் விடயப் பொறுப்பு அமைச்சரின் ஆலோசனையின் பெயரில் கட்டளைகளை செய்து முன் வைத்தல் வேண்டும். (மணல் , கல் , கிரவல் ,மண் உட்பட வேறு பௌதீக பொருட்கள்) பாவனையின் போது அதற்காக சுற்றாடல் அதிகார சபைக்கு நிதி அறவிடப்பட வேண்டும்

**மீன்பிடி நீர்வளங்கள்:**

மீன்பிடி வள முகாமைத்துவ கொள்கை.

17. மாகாண அதிகார சபையினால் ஆலோசனை சபையின் கருத்துக்கள் கேட்கப்பட்டு வட மத்திய மாகாண சபை எல்லைக்குள் உட்பட்ட உள்வாரி நீர்நிலைகளில் மீன்பிடி நீர்வளங்களை உயர்வான பிரயோசனத்திற்கு எடுத்து கொள்வதற்கான முறையொன்றினை விடயப் பொறுப்பு அமைச்சருக்கு சிபாரிசு செய்தல் வேண்டும். அதன் படி விடயப் பொறுப்பு அமைச்சரின் ஆலோசனையின் பெயரில் கட்டளைகளை அமைத்து முன் வைத்தல் வேண்டும்.

**வன விலங்கு வளங்கள்:**

வனவிலங்கு முகாமைத்து வம் செய்யும் கொள்கை.

18. மாகாண அதிகார சபையினால் ஆலோசனை சபையின் கருத்துக்களை கேட்டு வட மத்திய மாகாண வனவிலங்கு வளங்களை முறையாக பிரயோசனப்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்குமான முறையொன்றை விடயப் பொறுப்பு அமைச்சருக்கு சிபாரிசு செய்தல் வேண்டும். அதற்கமைய விடயப் பொறுப்பு அமைச்சரின் ஆலோசனையின் பெயரில் கட்டளைகளை தயார் செய்து முன்வைத்தல் வேண்டும்.

**வன வளங்கள்:**

19. மாகாண அதிகார சபையினால் ஆலோசனை சபையின் கருத்தைக் கேட்டு தயார் செய்யப்படுகின்ற –

(1) வனவளங்களை முறையாக பிரயோசனப்படுத்தல்;

(2) அருகிப்போவதற்கு உட்பட்டுள்ள அல்லது பாதுகாக்க பட வேண்டிய வன வளங்களை பாதுகாப்பதற்கு, முன்னேற்றுவதற்கு , மீள உற்பத்தி செய்யப்படுவதற்கும் , அவ் வளங்களை அழிப்பதற்கும் , விற்பனை செய்வதை கட்டுப்படுத்துவதற்கும் தடை செய்வதற்கும்;

(3) வனப் பாதுகாப்புக்கும் மர நடுகைக்கும் மக்களுடைய பங்களிப்பை பெற்றுக் கொள்ளுதலும் , ஊக்கப்படுத்துதலும்;

(4) காணி வகைப்படுத்தல் வன செயற்றிட்ட முகாமைத்துவம் செய்தல் கைத்தொழில் பெறுமானமிக்க எரிபொருள், பெறுமதியுள்ள விறகுகளை உடைய மரங்களை நடுதல் , பூங்காக்களையும் வன மிருகங்களையும் முகாமைத்துவம் செய்தல் , வனவியல் சம்பந்தப்பட்ட ஆய்வுகளை நடத்தலும் அவற்றை தேடியறிவதற்குமாக தேவையான செயற்பாடுகளை உருவாக்குதல். பாதிப்புக்களை வரையறைப்படுத் தல், ஆகக்குறைந்த பாதிப்புக்காக தேவையான சட்ட திட்டங்களை ஆக்குதல் , பாதைகளின் இரு பக்கங்களிலும் மரங்களை நடுதல், மர நடுகையை முறைப்படுத்தல் வனப் பூங்காக்களும் மரக் கூட்டங்களை யும் கொண்ட காடு சார் ஓய்வு நிலையங்களை அமைத்தல் , மண்ணை வளமுள்ளதாக பாதுகாத்தல் ஆகிய காரியங்களை நிலைநாட்டுவதற்காக முறையொன்றை விடயப்பொறுப்பு அமைச்சருக்கு சிபாரிசு செய்தல் வேண்டும். அச் சிபாரிசுகளை விடயப்பொறுப்பு அமைச்சரினால் பகுப்பாய்வு செய்ததன் பின்னர் தரப்படுகின்ற ஆலோசனையின் பெயரில் கட்டளைகளை தயார் செய்தல் வேண்டும்.

**மண் பாதுகாப்பு:**

20. நீர்பாசன , விவசாய , காணி , பிரதான வீதிகள் உள்ளூராட்சி விடயப் பொறுப்பு மாகாண அமைச்சுகளின் உதவியுடன் மாகாண அதிகார சபையினால் ஆலோசனை சபையின் கருத்துக்களை கேட்டு

ஆபத்து நிறைந்த நீர் இறங்கு பிரதேசங்களை இனங்காணல் , மண் அரிப்பை கட்டுப்படுத்தலும் , விஞ்ஞான ரீதியான விவசாய முறைகளை இனங்காணல் தேடியறிதலும் அறிமுகப்படுத்துதலும். மண்ணரிப்புக்கு உட்பட்ட பிரதேசங்களை இணங்காணல் , பாதுகாத்தல் மண்ணரிப்புக்கு காரணமான பயிர் உற்பத்திகள் அல்லது வேறு செயற்பாடுகளை வரையறுத்தல் , தடைசெய்தல் உற்சாகப்படுத்தல் மண்ணரிப்பு பாதிப்பை இணங்காணல் பிரதான வீதிகளையும் காணிகளிலும் நீர் இறங்கு முறைகளை முறைப்படுத்தல் , அபிவிருத்தி செய்தல் சம்பந்தமான வேலைத் திட்டங்களை விடயப் பொறுப்பு அமைச்சருக்கு சிபாரிசு செய்தல் வேண்டும். அதற்கமைய விடயப் பொறுப்பு அமைச்சரின் ஆலோசனையின் படி கட்டளைகளை தயார் செய்து முன் வைத்தல் வேண்டும்.

## V ஆம் பகுதி

### சூழல் பாதுகாப்பு

21. (1) இங்கு உரிய திகதியாக குறிப்பிடப்படுகின்ற விடயப் பொறுப்பு அமைச்சரினால் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படுகின்ற பணிப்புக்கள் மூலம் பணிக்கப்படுகின்ற ஏதேனும் திகதியில் இருந்து செயற்படும் படி எவரேனும் ஒருவரினால் :

(அ) மாகாண அதிகார சபையினால் வெளியிடப்படும் அனுமதிப்பத்திர அதிகாரத்தின் கீழ்

(ஆ) இச் சாசனத்தின் கீழ் பணிக்கப்படுகின்ற சேவை ஏதேனும் தரங்களுக்கு உபமானங்களுக்கு நிபந்தனைகளுக்கு கட்டளைகளுக்கு அமைவாக தவிர்ந்த சூழல் மாசடைவதற்கான கழிவுப்பொருட்கள் எனும் குப்பைகள் மிருக அல்லது மரத்தின் இரசாயன பொருட்கள் கழிவு வாயுப் பொருட்கள் அல்லது சூழலிற்கும் மக்கள் சுகாதார பாதுகாப்பிற்கும் நன்மை பயக்கக்கூடிய கழிவுப் பொருட்கள் துணிக்கைகள் உடனான விரும்பத்தகாத துர்வாடையுடனான வளியை அல்லது புகைகளை வெளிப்படுத்தல் செய்றபடுத்துதல் அல்லது அகற்றுவதற்கும் வெளிப்படுத்துவதற்கும் இடமளிக்கக் கூடாது.

கழிவுப் பொருட்கள் சூழலிற்கு அகற்றுதல் அல்லது அங்கு சேகரித்தலை தடை செய்தல்.

22. (1) மாகாண அதிகார சபையினால் பணிக்கக் கூடிய ஏதேனும் மாதிரி ஒன்றின் அது சம்பந்தமாக மாகாண அதிகார சபையிடம் செய்யப்படுகின்ற ஏதேனும் வேண்டுகோளின் அடிப்படையில் மாகாண அதிகார சபையில் குறிப்பிட்ட கட்டணத்தின் பெயரில் இம் மசோதாவின் கீழ் குறிப்பிடப்படக் கூடிய ஏதேனும் தரம் , உபமானங்களுக்கு நிபந்தனை களுக்கு கட்டளைகளுக்கு இயைய 20வது பிரிவில் வெளியிடப்படுகின்ற கழிவுப் பொருட்கள் இரசாயன பொருட்களின் வாயுக்கள் அல்லது புகைகள் சுற்றாடலிலிருந்து வெளியேற்றப்படுவதற்கு அல்லது அகற்றுவதற்கு, சேமித்து வைப்பதற்கு ஏதேனும் ஒரு நிறுவனத்திற்கு அல்லது யாதேனும் ஒருவருக்கு அதிகாரத்தை வழங்கி தற்காலிகமாக அல்லது வருடாந்த அனுமதி பத்திரம் ஒன்றை வழங்க முடியும்.

உத்தரவு பத்திரம் வழங்குதல்.

(2) அந்த அனுமதிப் பத்திரம் செல்லுப்படியாகும் காலம் உறுதியாக அங்கு நோக்கப்படுவதோடு ஒரே முறையில் “லித்” வருடம் கழிவதற்கு முன்னர் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட கூடாது. எனினும் எற்படுகின்ற அவசர மற்றும் எதிர் பாராத நிலைமைகளின் கீழ் அனுமதிப் பத்திர கால எல்லை தொடர்பாக மீள்பரிசீலனைச் செய்யலாம்

(3) 22.1 உப பிரிவுக்கமைய ஏதேனும் ஒரு காரியத்திற்காக ஏதேனும் அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்ட பின் அந்த காரியம் அனுமதிப் பத்திரத்தின் காலவரையறை கழிந்து மேலும் நடைமுறைப்படுத்திக் கொள்ள முடியாமல் புதிதாக அனுமதிப்பத்திரமொன்றை பெறுவதன் மூலம் அல்லது புதுப்பித்தலின் பின்னராக மட்டும் இருத்தல் வேண்டும்.

23. (அ) 22 ஆம் பிரிவிற்கமைய அனுமதிப் பத்திரமொன்று வழங்கும் போது உரிய விடயம் சம்பந்தமாக ஏதேனும் மாகாண அமைச்சு ஒன்றில் அல்லது திணைக்களம் ஒன்றின் அல்லது நிறுவனம் ஒன்றின் அல்லது எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரின் அறிக்கை அல்லது சிபாரிசினை பெற வேண்டும் என மாகாண அதிகார சபை கருதுமானால் அவ் வேண்டுகோள் சம்பந்தமாக அறிக்கை யொன்றை அல்லது சிபாரிசினை வழங்குமாறு மாகாண அமைச்சுக்கு அல்லது திணைக்களத்திற்கு அல்லது நிறுவனத்திற்கு அல்லது எவரேனும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆ. அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட விடயம் சம்பந்தமாக தாமதமின்றி உரிய மாகாண அமைச்சு திணைக்களம் அல்லது நிறுவனத்தின் அறிக்கையை அல்லது சிபாரிசினை மாகாண அதிகார சபையிடம் முன்வைக்க வேண்டும்.

உரிய அமைச்சு, திணைக்களம் அல்லது நிறுவனம் ஒன்றின் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளல்.

(இ) அவ்வறிக்கை அல்லது சிபாரிசு கிடைக்கும் வரை மாகாண அதிகார சபையினால் உரிய வேண்டுகோள் சம்பந்தமாக தீர்மானம் எடுக்க கூடாது.

24. (அ) இலக்கம் 22 ஆம் பிரிவிற்குட்பட்ட ஏதேனும் உத்தரவு பத்திரம் ஒன்று கிடைத்த ஒருவர் மாகாண அதிகார சபையினால் பணிக்கப்படுகின்ற நிபந்தனைகள் பணிப்புக்கள் அல்லது அனுமதிப் பத்திரத்தில் குறிப்பிடப்படுகின்ற சட்டதிட்டங்கள் எதையும் மீறி அல்லது கவனத்திற் கொள்ளாது விடப்பட்ட சந்தர்ப்பத்தில் அல்லது கழிவுப் பொருட்கள் வெளியேற்றப்படுவதற்கு சேகரிப்பதற்கு மேலும் தகுதியில்லை என அல்லது பிரயோசனமில்லை என மாகாண அதிகார சபையினால் தீர்மானிக்கப் படுகின்ற சந்தர்ப்பத்தில் அவ் அனுமதிப் பத்திரத்தை தற்காலிகமாக இடை நிறுத்தவும் அல்லது ரத்துச் செய்வதற்கு முடியும்.

(ஆ) அவ்வாறு இடைநிறுத்தப்பட்ட, இரத்துச் செய்யப்பட்ட உடனே அச் செயலை நிறுத்துதல் வேண்டும்.

*உத்தரவு பத்திரம் ஒன்று இருப்பதை நிராகரிக்கப்படு மிடத்து மனு செய்தல்.*

25. (1) (அ) மாகாண அதிகார சபையின் 22வது பிரிவின் பிரிவிற்கு உட்பட்டு அனுமதிப் பத்திரம் ஒன்று வழங்குவது நிராகரிக்கப்பட்டால் அதனை உரியவருக்கு அறியத் தருதல் வேண்டும்.

(ஆ) அவ்வாறு அறிவிப்பதில் அதிருப்தியடைந்த ஒருவர் அவ் அறிவித்தல் தினத்திலிருந்து 5 தினத்திற்குள் விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சு செயலாளருக்கு பதிவு தபாலில் அனுப்பும் கடிதம் ஒன்றின் மூலம் மனு ஒன்றை முன்வைக்க முடியும்.

(இ) அவ்வாறான மனுவொன்று சம்பந்தமாக விடயப் பொறுப்பு அமைச்சரின் செயலாளரினால் ஆலோசனை சபையின் எவரேனும் இரு அங்கத்தவர்கள் அல்லது அதற்கு மேலான பகுதியினர் மூலம் பரிசீலனை ஒன்று நடத்தி பெற்றுக் கொள்ளப்படுகின்ற சிபாரிசின் பெயரில் அமைச்சின் செயலாளர் முடிவு கொடுக்க வேண்டும்.

(2) விடயப் பொறுப்பு அமைச்சருடைய அமைச்சு செயலாளருடைய முடிவு இறுதி முடிவாக இருக்க வேண்டும்.

## VI ஆம் பகுதி
### சுற்றாடல் தன்மை

26. (1) (அ) கனமான நீர் அல்லது வாயுக்களாகும் ஏதேனும் கழிவுப் பொருள் ஏதேனும் நீர் தேக்கத்துக்குள் அல்லது வரண்டு காணப்படும் போது ஏதாவது ஒரு நதியில், ஆற்றில் அல்லது அல்லது வேறு நீர் நிலைய ஓரங்களில் விழுதல், இறங்குதல். வடிந்து செல்லுதல் ஆவியாகுதல் காற்றில் அடித்து செல்வதற்கு ஆவியாவதற்கு கழிவிச் செல்லல், கசிவடைவதற்கு இடமுள்ள நிலைமையில் தாபிக்கப்படுமானால் அல்லது அறிந்து கொண்டே அல்லது சுயமாக கவனியாது விடுதல் மூலம் நேராக அல்லது அவ்வாறு இல்லாமல் அவ்வாறு ஏதேனும் ஒரு பொருள் அந்த நிலைமையில் தாபிக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட்டால் அல்லது அதற்கு அனுமதி அளிக்கப்பட்டால்

(ஆ) வரண்ட நிலைமையில் காணப்படுகின்ற ஏதேனும் நதியொன்றில், ஆறு ஒன்றில் அல்லது வேறு நீர் நிலையில் அடித்தளத்தில் கழிவு பொருளொன்று தாபிக்கப்பட்டால் அல்லது தெரிந்து கொண்டு சுயமாக கவனியாது விடுதல் மூலம் அவ் அடித்தளத்தில் ஏதேனும் கழிவுப் பொருள் தாபிக்கப்படுவதற்கு வழி செய்தால் அல்லது அதற்கு அனுமதி வழங்கினால் முதலாவது உப பிரிவின் பரம்பலுக்கு வரையறுக்கப்படாத படி அவரினால் அந்த உப பிரிவின் சட்டத்திட்டங்களை மீறியதாக கருதப்பட வேண்டும்.

(2) 21.1 ஆகிய உப பிரிவின் சட்டத்திட்டங்களை மீறுகின்ற யாவரும் குற்றவாளியாக்கப்படுவதில்

*குற்றவாளி யானவருக்கு தண்டப்பணத் தை விதித்தல்.*

(அ) ரூபா 10,000 ற்கு குறையாத ஒரு இலட்சத்திற்கு மேற்படாத ஒரு நாளைக்கு அல்லது அதன் பிறகு அக் குற்றத்தை தொடர்ந்து செய்கின்ற சந்தர்ப்பமொன்றில் அக் குற்றத்தை அதே மாதிரி தொடர்ந்து செய்கின்ற ஒவ்வொரு தினத்திற்காக 500 ரூபா தண்டத்திற்கு உட்படுதல் வேண்டும்.

27. இச் சாசனத்தின் 21 ஆம் பிரிவிற்கு அமைய உரிய திகதியிலிருந்து நடைமுறைக்கு செயற்படுத்தும் படி இச் சாசனத்திற்கு அமைய விதிக்கப்படக் கூடிய ஏதேனும் தரங்களுக்கு உபமானங்களுக்கு அமைவதை விட யாதேனும் ஒருவரினால் வளிமண்டலத்தில் கழிவுப் பொருட்களை அகற்றுதல் அல்லது அதற்குள் வெளியேற்றுதல் செய்யக் கூடாது.

வளிமண்டலம் மாசடையவைத்தல் சம்பந்தமானவரை வரையறை விதித்தல்.

28. (1) யாராயினும் ஒருவரினால் வளிமண்டலம் அசுத்தமாக்கப்படுதல் விரும்பத் தகாதது ஆதலால் ,விசமாதல், அசுத்தமாதல் மனித வர்க்கத்தின் சுகாதாரத்திற்கு , நலநோம்பலுக்கு, பாதுகாப்பிற்கு அல்லது சொத்துக்களுக்கு தீங்காதல் மிருகங்களுக்கு, பறவைகளுக்கு, வனவிலங்குகளுக்கு மரங்களுக்கு அல்லது வேறு சகல முறையினை உயிரினங்களுக்கு விசமாதல் அல்லது தீங்கிழைத்தல் இல்லாவிட்டால் அந்த வளிமண்டலத்தை பிரயோசனமாக பயன்படுத்தும் போது பாதிப்பு ஏற்படும் வகையில் அல்லது அவ்வாறு நடைபெறும் என நியாயமாக எதிர்ப்பார்க்க கூடியபடி அவ் வளிமண்டலம் பௌதீக, இரசாயன அல்லது வாழ்க்கை வட்டம் மாறுபடும் வகையில் அவ் வளிமண்டலத்தை மாசுபடுத்தல் அல்லது மாசுப்படுத்துவதற்கு அல்லது வகை செய்தலுக்கு அனுமதி வழங்கப்பட கூடாது.

(2) எவரேனும் ஒருவரினால் -

(அ) இச் சாசனத்தின் மூலம் இச் சாசனத்திற்கு உட்பட்டு அல்லது அதனடிப்படையில் செய்யப்படுகின்ற கட்டளைகள் ஏதாவது ஒன்றின் மூலம் தாக்கப்படுவது தடை செய்யப்பட்ட திரவம் அல்லது வளியாக கூடிய ஏதாவது பொருளொன்று வளி மண்டலத்திற்கு அனுப்புவதற்கு ஏதாவது ஒரு முறையில் தாபிக்கப்படுமானால் அல்லது இச் சாசனத்தின் கீழ் அதற்காக விதிக்கப்படுகின்ற கட்டளைகள் ஏதாவது ஒன்றிற்கு அமைய செயல்பட முடியாமல் போனால் அல்லது

(ஆ) இயற்கையாக சேர்க்கப்படுகின்ற அளவு அல்லது விசாலத் தன்மை காரணமாக கொண்டு மனித வர்க்கத்தின் இந்திரியங்களை பழுதடைய செய்யக் கூடிய அல்லது முறையற்ற வகையில் வெறுப்படைய கூடிய வகையில் நாற்றங்களை வெளியேற்றப்படுவதற்கு வகை செய்யப்படுமெனில் அல்லது அதற்கு இடமளிக்கபடுமானால் அல்லது

(இ) குறிப்பிட்ட காலத்துக்கு அல்லது முறைக்கு அல்லது இடமில்லாத முறையற்ற முறையில் கழிவுப் பொருட்களை எரித்தால் கவனத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஈ) மாசடைவதை தடை செய்தல் குறைத்தலுக்காக உள்ளே நெருப்பு எழுப்பப் படுகின்ற எஞ்சின் ஒன்றிற்கு அல்லது எரிபொருள் போடக்கூடிய உபகரணமொன்றிற்கு இணைக்கக் கூடியதான கட்டளைகளினால் குறிப்பிட்ட ஏதேனும் முறைகள் உபாயங்கள் இணைக்க முடியாத அப்படிப்பட்ட உள்ளே நெருப்பு எழுப்படுகின்ற எஞ்சின் ஒன்று அல்லது எரிபொருள் போடக் கூடிய உபகரணமொன்றை பாவித்தல் அல்லது

29. இச் சாசனத்தின் மூலம் இச் சாசனத்திற்கு உட்பட்டு அல்லது அதன் கீழ் செயல்படுகின்ற ஏதேனும் கட்டளை ஒன்றின் மூலம் அதன் கீழ் வளிமண்டலத்தை மாசடைவதை தடுப்பது அல்லது வரையறுப்பதற்கான ஏதேனும் உபாய முறையுடன் செய்வதற்கு பணிக்கப்பட்டுள்ள ஏதேனும் இயந்திரமும் வாகனம் அல்லது வள்ளமொன்று அந்த இயந்திரத்தை வாகனத்தை வள்ளத்தை செய்யாது விட்டு அதன் படி செய்யாது இருக்கின்ற பாவிக்கின்ற இயங்குகின்ற அமைக்கின்ற விற்பனை செய்கின்ற கூட்டுவதற்கு முன்வருகின்ற எவரேனும் ஒருவர் தவறு செய்திருப்பினும் இந்த பிரிவின் கீழ் செய்யப்படுகின்ற கூட்டப்படுகின்ற அல்லது அதன்படி செயற்படும் உபாய முறைகளுள் உரிமையாளரின் செலவில் நடத்திச் செல்வது அல்லது செயல்படுத்துவது செய்யப்பட வேண்டும்.

உரிய நிர்வகிப்பு உபகரணம் பூட்டி நடத்தி செல்வதை தவிர்த்துக் கொள்வது குற்றமாகும்.

30. இச் சாசனத்தின் 21 வது பிரிவின் கீழ் உரிய திகதியிலிருந்து செயல்படுத்தும் வகையில் இச் சாசனத்திற்கு உட்பட்ட விதிக்கப்படக்கூடிய ஏதேனும் தரத்திற்கும் உபமானங்களுக்கு அமைய அகற்றுதல் குவித்தல் செய்யக் கூடாது

மண்ணை மாசடையச் செய்தல் வரையறை செய்வதை முறைப்படுத்தச் செய்தல் அல்லது நிர்வகித்தல்

*மண்ணை மாசடையச் செய்தல் குற்றமென.*

*31. (1)* எவரேனும் ஒருவரினால் மண்ணை அல்லது மண்ணின் உற்பத்தியை மனித வர்க்கத்தின் சுகாதாரத்திற்கு நலனோம்பலுக்கு விஷமாகுதல் அல்லது சுத்தமாவதற்கு பாதிப்பு ஏற்படுத்துதல் அல்லது பாதிப்பு ஏற்படக்கூடியதாக விலங்குகளுக்கு, பறவைகளுக்கு வனவிலங்குகளுக்கு மரங்களுக்கு அல்லது வேறு வகையில் அவ்வாழ்க்கைக்கு விஷத்தை உண்டாக்குதல் அல்லது பாதிப்படையச்செய்தல் மனித வர்க்கத்தின் இயக்கங்களுக்கு விரும்பத்தகாததால் அல்லது முறையற்ற விதத்தில் தாக்கமாதல் நடைபெறும் வகையில் அல்லது காணியை பிரயோசனமான முறையில் பாவிக்கும்போது பாதிப்பு வரும் வகையில் அல்லது அவ்வாறு நியாயமாக எதிர்பார்க்க முடியுமான வகையில் ஏதேனும் மண்ணின் பௌதீக, இரசாயன அல்லது உயிர்த் தன்மை மாற்றமுறும் வகையில் அந்த மண்ணின் இடத்தின்மேல் மாசடையச்செய்தல் அல்லது மாசடையச் செய்யும் போது அங்கு அனுமதி வழங்கப்படக் கூடாது.

*(2)* எவரேனும் ஒருவரினால் –

(அ) ஏதேனும் மண் அல்லது ஏதேனும் மண்ணின் மேல் உண்டாகக் கூடிய ஏதேனுமொரு இடத்தில் இச்சாசனத்தின் மூலம் அல்லது அதனடிப்படையில் செய்யப்படுகின்ற தீர்மானம் அல்லது வெளியாகின்ற ஏதேனும் பொருளொன்று தாபிக்கப்படுமானால் அல்லது பணிக்கப்பட்டுள்ள கட்டளை ஒன்றிற்கமைய செயற்படாத பட்சத்தில் அல்லது

(ஆ) மனிதவர்க்கத்தின் இந்திரியங்களுக்கு தீமைபயக்கின்ற அல்லது முறையற்றவகையில் தீமையை ஏற்படுத்தும் அல்லது பூமியின் கீழ் உள்ள நீரை மாசுபடுத்தும் அல்லது அதற்குத் தேவையற்ற பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற மண்ணை அல்லது மண்ணினால் பிரயோசனமாகப் பாவிக்கும் போது தீமை பயக்கின்ற வகையில் குப்பை கூலங்களை அழுக்குக்குழி, மண்ணையும் கல்லையும் அகற்றும் பூமி பொய்மண் அல்லது வேறு இடத்தில் கழிவுப்பொருட்களை அகற்றுதலுக்காக அல்லது அநாவசியமான முறையில் பாவித்தல்.

*31.(1)* ஆகிய உபபிரிவின் பரவலுக்கு வரையறுக்கப்படாத வகையில் அரசினால் அந்த உபபிரிவின் சட்டதிட்டங்களை மீறியதாக கருதப்படல் வேண்டும்.

*(2)* கட்டுப்படுத்துவதற்காக குறிப்பிட்ட முறையில் அனுமதிக்கப்பட்ட மருந்து கலப்பொன்று ஈடுபடுத்தல் ஆகிய அனுமதிக்கப்பட்ட காரணங்களோடு முன் சுதந்திரத்தோடு வழங்கப்படமுடியும் அவ்வாறானாலும் அப்படிப்பட்ட மருந்துக் கலவையினால் மண்ணிற்கு கடுமையான தீமை பயக்கக்கூடாது.

(அ) இச்சாசனத்திற்கமைய செய்யப்படுகின்ற கட்டளைகளின் மூலம் தடைசெய்யப்பட்ட எரிபொருட்கள் எவையும் பாவிக்கப்பட்டால், சுட்டெரிக்கப்பட்டால் 31.1வது பிரிவின் பரவலுக்கு வரையறை இல்லாத படி அவரினால் இவ்வுப பிரிவின் சட்டத்திட்டங்களை மீறியதாக கருதப்படுதல் வேண்டும்.

*31.(4) 31. (1)* வது உபபிரிவின் பரவலுக்கு வரையறுக்கப்படாதபடி அவரால் அவ்வுபபிரிவின் சட்டதிட்டங்களை மீறியதாகக் கருதப்படல் வேண்டும் .-

*இச் சட்ட திட்டங்களை மீறும் போது தண்டப்பணம் தீர்மானித்தல்.*

(அ) பத்தாயிரம் ரூபாவிற்குக் குறையாத ஒரு லட்சத்திற்கு மேற்படாத தண்டத்திற்கும் அதன்பிறகு அக்குற்றத்தை தொடர்ந்து செய்யும் சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு தினத்திற்கும் ஐநூறு ரூபா தண்டத்திற்குட்படல் வேண்டும். மேலும்

*மாசடைதலை நிவர்த்தி செய்தலும் அதிகார சபையின் செயற்பாடும்.*

(ஆ) நீதிமன்றத்தினால் நிச்சயிக்கப்படுகின்ற ஏதேனும் காலத்தினுள் வளிமண்டலத்தை மாசடைய வைத்தல் மூலம் அதிகமாகத் தீமை பயப்பதைத் தடுப்பதற்கு தேவையெனக் கருதும் ஏதேனும் நிவர்த்திசெய்யும் நடவடிக்கையை எடுக்குமாறும் அவ்வாறு நிவர்த்தி செய்வதற்காகபோதுமான ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியங்களை அக்காலம் முடிவதற்கு முன் முன்வைக்க அவருக்குப் பணித்தல் வேண்டும். அதுவரைக் கும் நிகழ்ந்துள்ள தீமையை நிவர்த்திக்க அதிகார சபையினால் செய்யப்பட்ட செலவினத்தை பொறுப் பேற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக ஆக்கப்பட்டவருக்குப் பணித்தல் வேண்டும்.

*31.(5)31. (3)* ஆம் உபபிரிவின் கீழ் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்ட எவரேனும் ஒருவரினால் அவர் குற்றவாளியாக்கப்பட்ட திகதியிலிருந்து ஆறுவாரங்களுக்குப்பின் அக்குற்றத்தைத் தொடர்ந்தும் செய்துகொண்டு செல்லும் சந்தர்ப்பத்தில் மேலும் தீமை விளைவிப்பதைத் தடுப்பதற்காக அவரினால் நிவர்த்திக்கக்கூடிய

நடவடிக்கையை எடுக்கும்வரை வளிமண்டலத்தை மாசடையச்செய்த இடத்தில் நடாத்திச் செல்லப்படும் கைத்தொழிற்சாலையை, கைத்தொழிலை, வியாபாரத்தை மூடிவிடுவதற்காக சிரேஷ்ட சூழல் நிபுணர் ஒருவர்/ பணிப்பாளரினால் அல்லது அதுசம்பந்தமாக அவரினால் அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனும் ஒரு உத்தியோகத்தரினால் செய்யப்படுகின்ற வேண்டுகோளின் பேரில் நீதிமன்றத்தினால் ஆணையிடப்பட முடியும்.

31.(6) 31.(4) உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட மூடப்படவேண்டிய ஆணைக்கு அமைய செயற்படுவதை அந்நபரினால் உதாசீனம்செய்யும் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் மஜிஸ்திரேட் அவர்களினால் ஆணையொன்றின் மூலம் அவ் ஆணையை வெளியிட்ட திகதியிலிருந்து தெளிவாக மூன்று தினங்களுக்குள் அல்லது ஏழு தினங்களுக்குப் பிறகு நடைபெற இல்லாத ஒரு திகதியாக இருக்க வேண்டும். அவ்வாணையில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு முன் அவ்விடத்தில் நடாத்திச் செல்லும்கைத்தொழிற்சாலை, கைத்தொழில் , வணிகத்தை மூடுமாறு நீதிமன்றம் பிஸ்காலுக்குப் பணித்து அல்லது அதிகாரத்தை வழங்கி அதை பிஸ்காலுக்கு மிகவும் விரைவாகப் பணித்தல் வேண்டும்.அவ்விடத்தில் நடாத்திச்செல்லுகின்ற அக்கைத் தொழிற்சாலை அல்லது கைத்தொழில் வணிகத்தை மூடுவதற்காக அங்கு கூறப்பட்ட பிஸ்காலினால் அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு அவ்வாணை போதுமான அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும்.

31.(7)மேலேயுள்ள பிரிவுகளின் சட்டதிட்டங்களில் ஏதேனும் சட்டதிட்டமொன்றைமீறும் எவரேனும் ஒருவர் குற்றம் செய்வதுடன் குற்றவாளியாக்கப்படும்போது ரூபா பத்தாயிரத்துக்குக் குறையாத ஒரு இலட்சத்திற்குக் கூடாத தண்டத்துக்கும் அக்குற்றம் தொடர்ந்து செய்துகொண்டு செல்லும்பொழுது குற்றவாளியாக்கப்பட்டதன் பின் அக்குற்றத்தைத் தொடர்ந்து செய்துகொண்டு செல்கின்ற ஒவ்வொரு தினத்திற்கும் ரூபா ஐநூறு தண்டப்பணத்திற்கு உட்படுதல் வேண்டும்.

32. இச்சாசனத்தின் 34வது பிரிவின்கீழ் உரிய தினத்திலிருந்து அதிகாரமுள்ளபடி எவரேனும் ஒருவரினால் சப்த அளவு அதிகம் எனவும் அளவு சம்பந்தமாக நிச்சயிக்கப்படக்கூடிய ஏதேனும் தரம் அல்லது வரையறைகள் அந்நபர்மூலம் பின்பற்றப்படுமானால் மட்டும் அவ்வாறான அதிக சத்தத்தை வெளியிட அதிகாரசபையினால் அனுமதி வழங்கக்கூடாது. சத்தம் மாசடைவதை வரையறுத்தல்

33. (1) இச்சாசனத்தின் கீழ் அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற உத்தரவுப்பத்திர அதிகாரத்தின்கீழ் தவிர்ந்த யாராவது ஒரு நபரினால் தாங்கக்கூடிய அளவு சத்தம் சந்தர்ப்பத்திற்காக நிச்சயிக்கப்பட்டுள்ள அளவு பரிமானத்திற்கு மேல் என அல்லது அளவினைவிட சத்தமொன்றை உண்டாக்க அல்லது வெளியிட இல்லாவிட்டால் உண்டாக்கப்படுவதற்கு அல்லது வெளியிடுவதற்கு வகைசெய்தலுக்கு அல்லது அங்கே அனுமதி வழங்கக்கூடாது.

(2) 22 ஆம் 23 ஆம் பிரிவு சட்டதிட்டங்களின்படி தேவையான மாற்றங்களோடு 22.1 உப பிரிவின் கீழ் உத்தரவுப் பத்திரம் ஒன்று வழங்குதல் நடைபெற வேண்டும்.

(3) இச்சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஒரு நபருக்கு உரியதாக அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு வேறு ஏதேனும் எழுத்துமூலமான சட்டத்தினால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அதிகார சபை அல்லது நிறுவனமொன்று நிச்சயிக்கப்பட்ட தரத்திற்கமைய செயற்பட வேண்டும்.

34. (1) அனுமதிப்பத்திரம் ஒன்று இல்லாமல் அல்லது ஏதேனும் ஒரு சாசனம் அல்லது ஏதேனும் எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் உள்ள அனுமதிப்பத்திரமானால் நிபந்தனை ஒன்றுக்கு வரையறுப்பதற்கு தடைசெய்யப்படுவதற்கு முரணான சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விடயத்திற்கமைய மத்திம அளவு சத்தமாக தரத்தைவிட பரிமானத்தில் கூடுதலாகவும் அல்லது பிரமானத்திற்கு அதிக சத்தத்தை உண்டு பண்ணுகின்ற அல்லது வெளியாக்குகின்ற இல்லாவிட்டால் உண்டாக்குவதற்கு அல்லது வெளியேற்றுவதற்கு வகைசெய்கின்ற அல்லது அனுமதி எடுக்கின்ற யாரேனும் ஒரு நபர் இம்மசோதாவின் கீழ் குற்றமொன்றிற்கு குற்றவாளியாதல் வேண்டும். அதிக சத்தம் குற்றமென

(2) 34.1 உப பிரிவிற்குட்பட்டு குற்றத்திற்கு குற்றவாளியாகின்ற எவரேனுமொருவர் குற்றவாளியாக்கப்படும் போது ரூபா பத்தாயிரத்திற்குக் குறையாத ஒரு இலட்சத்திற்கு மேற்படாத தண்டத்திற்கும் அக்குற்றம் தொடர்பாக செய்துகொண்டு செல்கின்ற குற்றமாகும்போது குற்றவாளியாக்கப்படின் அக்குற்றத்தைத் தொடர்ந்துசெய்துகொண்டுவரின் ஒவ்வொரு தினத்திற்குமாக ரூபா ஐநூறு தண்டப்பணத்திற்கு உட்படல் வேண்டும்.

*குப்பை கூளங்களை அகற்றுவது சம்பந்தமான அறிவித்தல்*

35. பொது அல்லது தனிப்பட்ட ஏதேனுமொரு இடத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள குப்பை கூளம் எவற்றாலும் பொதுமக்களின் சுகாதாரத்திற்கு அல்லது பாதுகாப்பிற்கு அல்லது நலநோம்பலுக்கு தீமையாகின்ற அல்லது தீமைபயக்கக்கூடிய அல்லது மனித வர்க்கத்தின் இந்திரியங்களுக்கு தேவையற்றவகையில் துன்பங்களைக் கொடுத்தல் சந்தர்ப்பத்திற்கு ஏற்ற விடயங்களில் வந்துள்ளமையென அதிகாரசபையின் அபிப்பிராயம் உள்ள சந்தர்ப்பத்தில் அதிகார சபையினால் எழுத்துமூலமான அறிவித்தல் மூலம் அக்குப்பை கூளங்களை அகற்றுமாறு அல்லது குப்பை கூலளங்களுக்குரிய அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு நடவடிக்கையை எடுப்பதாக அக்குப்பை கூளங்கள் சேர்த்துவைப்பது சம்பந்தமாக பொறுப்புக் கூறக்கூடியவருக்கு அல்லது அக்குப்பை கூளங்களை அகற்றுவதற்கு அல்லது விலக்குவதற்கு சுயகாரியமென ஏதேனும் அரச அதிகாரசபைக்கு விதிக்கமுடியும். இப்பிரிவின் செயற்பாடுகளுக்காக குப்பை கூளங்கள் எனும் உற்பத்திச் செயற்பாட்டில் ஏற்பட்ட இடை உற்பத்தியொன்று அல்லது அங்கு பிரயோசனமான செயற்பாட்டு வாழ்க்கையை முடித்துள்ள அல்லது அகற்றப்பட்டுள்ள உற்பத்தியாளர் அல்லது விடுகின்ற அநாவசியமான கழிவுப்பொருட்கள் எனக் கருதப்படும்.

*குப்பை கூளங் களை அகற்றும் கட்டணம் அதற்கு பொறுப்பு கூறுபவரிடம் அறவிடப்பட முடியுமென*

36. 35ம் பிரிவின் கீழ் கொடுக்கப்படுகின்ற அறிவித்தலுக்கேற்ப குப்பை கூலங்களை அகற்றுவது அல்லது வேறுவிதமாக ஒதுக்குவது அல்லது குறைக்கும் கட்டணம் அதிகாரசபைக்கு அகற்றும் கிடைக்கும் கடனாக உரிய நீதிமன்ற அதிகாரமுள்ள ஏதேனும் ஒரு நீதிமன்றத்தில் அக்குப்பை கூளங்களைச் சேகரிப்பதற்கென நிரூப்பிக்கப்பட்ட யாரேனும் ஒருவரிடம் அறவிட முடியும் என்பதோடு அக்கட்டணத்தை அவ்வாறு அறவிடப்பட்ட விடத்து அதிகார சபையின் நிதியத்துக்கு வழங்கப்படவேண்டும்.

*அறிவித்தலின் படி செயற்படுவதை மீறியமை குற்றமென*

37. 35 வது பிரிவின் கீழ் எழுத்துமூலமான அறிவித்தலில் கவனத்திற் கொண்டுவரப்பட்டு எவரேனும் ஒருவருக்கு அவர் நியாயமான காரணமின்றி அவ்வறிவித்தலின் பணிப்புக்கியைய செயற்படாமல் மீறியதாக நிரூபிக்கப்பட்டால் அவர் குற்றத்திற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

*ஏதேனும் ஒரு பொருள் அல்லது உபகரணம் பாவிப்பதை தடை செய்தல் அல்லது பாவிப்பதற்கு பணிப்பதற்கு அதிகாரம் உள்ளதென*

38. (1) வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற கட்டளைகள் மூலம் விடயப்பொறுப்பு அமைச்சரினால் அக்கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ளபிரதேசங்களுக்குள்ளே சூழலின் பண்புசார் தன்மைக்கு ஆபத்து ஏற்படுவதற்காக -

(அ) ஏதேனுமொரு பொருளை செயற்பாடொன்றிற்கு வியாபாரமொன்றிற்கு , கைத்தொழில் ஒன்றிற்கு பாவித்தலைத் தடைசெய்தல்

(ஆ) ஏதேனும் உபகரணமொன்று கைத்தொழில் சூழலை விபரிப்பதற்கு அமைய அல்லது வியாபார சின்னத்திற்கு அமைய பாவிப்பதை தடைசெய்ய முடியும்

(2) வர்த்தமானணியில் வெளியிடப்படும் பணிப்பொன்றின் மூலம் உரிய அமைச்சரினால் அப்பணிப்பில் குறிப்பிடப்பட்ட பிரிவொன்றின் உள்ளே ஏதேனும் உபகரணம் அல்லது கைத்தொழில் சூழலை அமைப்பதற்காக புதுப்பிப்பதற்காக, நடாத்திச்செல்வதற்காக அல்லது செயற்படுமாறு பணிக்க முடியும்.

(3) 1வது 2வதும் உபபிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் பணிப்பு உள்ள தடைசெய்யப்பட்டுள்ள அல்லது கட்டளைக்கிணங்க செய்யப்படுவதை உதாசீனம் செய்கின்ற எவரேனும் ஒருவர் குற்றமொன்றிற்கு குற்றவாளியாக்கப்பட வேண்டும்.

39. இச்சாசனத்தின் இப்பகுதியின் கீழ் குற்றம் சம்பந்தமாக வழக்குத் தொடர்வதற்கு செயலாளரின் கையொப்பத்தில் வெளியிடப்பட்டுள்ள சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள சுற்றாடல் மாசடைவு சுற்றாடலுக்கு செய்துள்ளதாக அச்சான்றிதழை சாட்சியாகக்கொள்ள முடிவதோடு அதனுள் உட்பட்டுள்ள காரணங்கள் சம்பந்தமாக அது ஆரம்பப்பார்வைக்குத் தெரிகின்ற சாட்சியாகும்.

அச்சான்றிதழ் அதில் குறிப்பிடப்படும் விடயம் சம்பந்தமாக முதற் பார்வையில் தெரிகின்ற சாட்சியாக வேண்டுமென

## VII ஆம் பகுதி

### செயற்றிட்டமொன்றை அனுமதித்தல்

40. (1) இச்சாசனத்தில் இப்பகுதியின் காரியங்களுக்காக வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற பணிப்புமூலம் விடயப் பொறுப்பு அமைச்சரினால் செயற்றிட்டத்தை அனுமதிக்கும் அமுல்படுத்தும் நிறுவனமாக இருக்கவேண்டிய இப்பகுதியில் இதன்பின்னர் சுற்றாடல் துணை நிறுவனத்திற்காக குறிப்பிடப்படுகின்ற மாகாண சுற்றாடல் துணை நிறுவனம் அல்லது நிறுவனங்கள் பெயரிடப்படல் வேண்டும்.

செயற்றிட்டத்தை அனுமதிக்கும் துணை நிறுவனம்

(2) சுற்றாடல் துணை நிறுவனத்தினால் விடயப்பொறுப்பு அமைச்சரினால் முன்வைக்கப்படுகின்ற காரணங்களுக்கும் விதிக்கப்படுகின்ற வரையறைக்கும் நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் உட்பட்டு செயற்படல் வேண்டும்.

(3) அச்சுற்றாடல் துணை நிறுவனங்களை இரத்துச் செய்ய அல்லது இடைநிறுத்த மீண்டும் நிறுவுவதற்கு விடயப்பொறுப்பு அமைச்சரின் விருப்பத்தின்படி செயற்படவேண்டும்.

41. வர்த்தமானியில் வெளியிடப்படுகின்ற பணிப்பின் மூலம் உரிய விடயப் பொறுப்பு அமைச்சரினால் அச்சாசனத்தின் இப்பகுதியின் சட்டத்திட்டங்களுக்கமைவாக அனுமதியைப் பெறுவது தேவைப்படும் போது இங்கு இதன் பின்னர் குறிப்பிட்ட செயல் திட்டமென குறிப்பிடப்படுகின்ற செயற்றிட்டமும், திட்டங்களும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

உரிய செயற்றிட்டம்

42. (1) வேறு ஏதேனும் எழுத்துமூலமான சட்டத்தில் எவ்வாறிருந்தாலும் இச்சட்டமூலம் செயல்படும் திகதியிலிருந்து அதன் பின் அரசாங்கம் ஏதேனும் ஒரு திணைக்களம் , கூட்டுத்தாபனம் , அமைக்கப்பட்ட சபை, உள்ளூராட்சி நிறுவனம் , கூட்டுறவு சமாஜம், வியாபார நிறுவனம் அல்லது தனிப்பட்டவர்கள் வட மத்திய மாகாணத்தில் ஆரம்பிக்கப்படுகின்ற, சகல குறிப்பிட்ட செயல் திட்டம் ஒன்றினை அந்த குறிப்பிட்ட செயல் திட்டத்தை செயல்படுத்துவதற்காக இச் சாசனத்தின் கீழ் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென பணிக்கப்படும்.

(2) முதலாவது உப பிரிவில் குறிப்பிடப்பட்ட அனுமதி அது குறித்த செயல்திட்டத்திற்குரியதாக அல்லது அத்தோடு தொடர்புபட்ட செயல் திட்டங்களை அனுமதிக்கும் சுற்றாடல் துணை நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

(3) ஏதேனும் சுற்றாடல் துணை நிறுவனமொன்று இச்சாசனத்தின் அல்லது கட்டளைகளின் சட்டத் திட்டங்களை மீறி அல்லது முரணான அனுமதி பத்திரமொன்றை வழங்கியிருப்பின் அதனை இரத்துச் செய்ய அல்லது இடைநிறுத்தும் அதிகாரம் மாகாண அதிகார சபைக்கு உரித்தாகும் .

சுற்றாடல் துணை நிறுவனங்களின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படல்.

43. (1) ஏதேனும் ஒரு செயல் திட்டத்திற்குரிய செயற்றிட்டங்களை அனுமதிப்பதற்கு துணை நிறுவனத்தினால் பணிக்கப்பட கூடிய வகையிலும் அதன் கருமங்களுக்காக விடயப் பொறுப்பு அமைச்சரினால் பணிக்கப்பட கூடிய ஏதேனும் தகவல்களும் விபரங்களும் அடங்கிய ஆரம்ப சுற்றாடல் விசாரணை அறிக்கையொன்று அல்லது சுற்றாடல் பாதிப்பு கணிப்பீட்டு அறிக்கையொன்று குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் முன்

சுற்றாடல் பாதிப்பு மதிப்பீட்டு அறிக்கையை முன்வைத்தல்

வைக்குமாறு சுய அனுமதிக்காக, ஏதேனும் குறிப்பிட்ட செயல்திட்டமொன்றை முன்வைக்கின்ற ஏதேனும் உள்ளூராட்சி நிறுவனமொன்றினால் , சமாசம் தாபனமொன்றினால், அரச அல்லது வியாபார நிறுவனமொன்றினால் அல்லது தனியார் ஒருவரிடம் கேட்பதற்கு சகலதும் துணை நிறுவனமொன்றின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(2) முதலாவது உப பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட பணிப்புகளுக்கமைய செயல் திட்டத்தினை அனுமதிக்கும் துணை நிறுவனத்திடம் முன் வைக்கப்பட்ட சந்தர்ப்பத்திற்கு உகந்த மாதிரி ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை அறிக்கை ஒன்று அல்லது சூற்றாடல் பாதிப்பு கணிப்பீடு செய்யும் அறிக்கையொன்று கிடைத்தவுடன் அச் செயற்றிட்டத்தை அனுமதிக்கும் மாகாண துணை நிறுவனத்தினால் வர்த்தமானியில் சிங்களம்,தமிழ்,ஆங்கிலம் ஆகிய ஒவ்வொரு மொழியிலும் ஒவ்வொரு செய்தித் தாளிலும் வெளியிடப்படும் அறிவித்தல் மூலம் அவ்வறிக்கையை பொது மக்களினால் பரிசீலனை செய்யக் கூடிய இடம் நேரம் அறிவித்தல் செய்யப்பட வேண்டியதுடன் அது சம்பந்தமான கருத்துக்கள் ஏதேனும் தெரிவிக்க இருக்குமாயின் அவ்வாறு அறிவிக்குமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்தல் வேண்டும்.

(3) 2 ஆவது உப பிரிவின் கீழ் அறிவித்தலொன்று வெளியிடப்பட்ட திகதியிலிருந்து 30 தினங்களுக்குள்ளாக பொதுமக்களில் ஏதேனும் ஒரு அங்கத்தவரினால் அவ் அறிவித்தலை பிரசுரித்த சுற்றாடல் துணை நிறுவனத்திடம் அது சம்பந்தமாக கருத்து ஏதேனும் இருந்தால் அக் கருத்தினை வெளியிட முடியும்

மேலும் தமது கருத்தினை உறுதிப்படுத்துவதற்காக விடயங்களை அறிவிக்கும் சந்தர்ப்பம் ஒன்று அவருக்கு வழங்குவது பொதுசன நலனுக்காக நிறுவனம் கருதும் சந்தர்ப்பத்தில் அந் நிறுவனத்தினால் அவருக்கு அவ்வாறு கருத்துக்களை வெளியிட சந்தர்ப்பமொன்று பெற்றுக் கொடுக்க முடிவதோடு அக் குறிப்பிட்ட செயற்றிட்டத்தை செயல்படுத்துவதற்காக சுயமான அனுமதியை வழங்க வேண்டுமென தீர்மானிக்கும் பட்சத்தில் செயல் திட்டத்தை அனுமதிக்கும் உறுதிப்படுத்தல் நிறுவனத்தினால் அக் கருத்தை தெரிவிக்கும்போது வெளிக் கொணரப்பட்ட கருத்துக்களோடு வேறு காரணங்கள் சம்பந்தமாகவும் கவனத்திற்கொள்ள முடியும்.

*செயல்முறை குறிப்பிட்ட வழிகாட்டலை அடிப்படையாக கொள்ளல் வேண்டும்.*

44. செயற்றிட்டத்தை அனுமதிக்கும் துணை நிறுவனத்திடம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் செயற்றிட்டம் எதையேனும் அனுமதிக்கப்படும் போது பின்பற்ற வேண்டிய செயல் முறையை அச் செயற்றிட்டத்தை அனுமதிக்கும் துணை நிறுவனத்தினால் தீர்மானிக்கப்பட வேண்டும். இச் செயல்முறை அமைச்சரினால் அக் காரணம் சம்பந்தமாக பணிக்கப்படுகின்ற வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

*விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளருக்கு மீள் விண்ணப்பம் செய்தல்*

45. (1) சுய அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகின்ற ஏதேனும் குறிப்பிட்ட செயற்றிட்டம் ஒன்றிற்காக அனுமதி வழங்க செயற்றிட்டத்தை அனுமதிக்கும் துணை நிறுவனம் ஒன்றினால் நிராகரிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் ஒன்றில் அத் தீர்மானத்திற்கெதிராக விடயப் பொறுப்பு அமைச்சரின் அமைச்சின் செயலாளருக்கு மீள் விண்ணப்பம் செய்ய அதிருப்திக்குள்ளானவருக்கு அல்லது தனிப்பட்ட சபைக்கு உரிமையிருத்தல் வேண்டும்.

( 2) அப்படிப்பட்ட மீள் விண்ணப்பமொன்றின் அடிப்படையில் விடயப்பொறுப்பு அமைச்சரின் செயலாளரின் முடிவு இறுதியாக இருத்தல் வேண்டும். விடயப் பொறுப்பு அமைச்சரின் செயலாளர் அத்தீர்மானத்திற்கு வருவதற்கு முன் ஆலோசனை சபையின் பரிசீலனையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

46. அனுமதியை வழங்கிய பின் ஏதேனும் செயல்திட்டமொன்று சம்பந்தமாக மாற்றங்கள் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது அப்போது அனுமதிக்கப்பட்டுள்ள ஏதேனும் செயல் திட்டமொன்று கைவிடப்படும் சந்தர்ப்பமொன்றில் அப்படிப்பட்ட அனுமதி பெற்ற மாகாண சபை ஏதேனும் திணைக்களம் ஒன்றில் கூட்டுத்தாபனம் ஒன்று யாப்புச் சபை உள்ளூராட்சி நிறுவனம் சமாசம், அரச அல்லது வியாபார நிறுவனம் அல்லது தனிப்பட்ட நபரின் பொருத்தமான செயல் திட்டம் அனுமதிக்கு துணைநிறுவனத்திடம் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அம் மாற்றங்கள் அல்லது கைவிடல் சம்பந்தமாக அறிவித்தல் கொடுக்கப்பட வேண்டியதோடு தேவைப்படும் சந்தர்ப்பத்தில் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ள குறிப்பிப்பட்ட செயல் திட்டமொன்று சம்பந்தமாக செய்யக் கருதப்படும் மாற்றங்கள் எவையேனும் மீண்டும் அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும். அதேபோல் கைவிடப்படும் அல்லது மாற்றம் செய்யப்படும் குறிப்பிட்ட செயல்திட்ட அதிகார சபையின் ஒப்புதலுடன் அனுமதிக்கப்பட்ட செயல்திட்டமாகும் சந்தர்ப்பத்தில் அது சம்பந்தமாக மாகாண சுற்றாடல் அதிகார

சபைக்கு அறிவிப்புச் செய்யப்பட வேண்டுவதோடு பெற்றுக் கொள்ளாத தேவையான ஏதேனும் புதிய அனுமதியொன்று அதிகார சபையின் ஒப்புதலோடு மாத்திரம் கொடுக்கப்படல் வேண்டும்.

*அனுமதிக்கப் பட்ட குறிப்பிட்ட செயற்றிட்டம் சம்பந்தமாக அறிக்கையொன்று சமர்ப்பித்தல்.*

47. (1) செயற்றிட்டம் அனுமதிக்கப்படும் துணை நிறுவனம் ஒன்றினால் அனுமதி வழங்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட செயற்றிட்டம் சம்பந்தமாக அறிக்கையொன்று மாகாண அதிகார சபையிடம் சமர்ப்பித்தல் செய்வது சகல சுற்றாடல் துணை நிறுவனங்களின் கடமையாக வேண்டும்.

(2) (அ) அனுமதியில்லாதவைகளில் அகற்றும் அதிகாரம் வடமத்திய மாகாண சபை அதிகார பிரதேசத்திற்குள் அச் சாசனத்திற்கமைய அனுமதிப்பத்திரமொன்றை பெற்றுக்கொண்டால் தவிர நிர்மாணிப்பதற்கு அல்லாத நடைமுறைப்படுத்திச் செல்லல் அல்லது செய்யக் கூடாத ஏதேனும் ஒரு நிர்மாணிப்பு அல்லது சுற்றாடல் பாதுகாப்புக்கு தடை ஏற்படுத்துகின்ற ஏதேனும் தடையொன்று உடனே அகற்றுமாறு அல்லது நிறுத்துமாறு நிர்மாணிக்கும் செயற்றிட்டத்தில் இருக்கின்ற தடை அல்லது நிர்மாணித்த அல்லது நடைமுறைப்படுத்திச் செல்கின்ற அல்லது பொறுப்பாக இருக்கின்ற அல்லது பதிவாக உள்ளோர் உரிமை கொண்ட அல்லது ஏதேனுமொருவர் அல்லது சுற்றாடல் துணை நிறுவனம் ஒன்றின் மூலம் வாய் மூலமாக அல்லது எழுத்தினால் இடப்படுகின்ற கட்டளை இடுதல் சட்ட ரீதியாவதோடு அக் கட்டளையை பெற்ற நபரினால் மாகாண அதிகார சபையினால் பணிக்கப்படுகின்ற காலத்துக்குள் அக் கட்டளைக்கியைய செயல்படுவது நிராகரிக்கப்படுமாயின் அல்லது கவனியாது விடப்படுமாயின் அந்த கட்டளையை செய்யப்பட வேண்டிய நபர் யாரென்பது சம்பந்தமாக ஏதேனும் சந்தேகம் இருக்குமாயின் மாகாண அதிகார சபையினால் கருதப்படுகின்ற நியாயமான காலம் ஒன்றுக்குள் அந்த பணிப்பை அந்த இடத்தில் நிர்மாணிக்கின்ற அல்லது இணைக்கின்ற அல்லது ஒட்டி வைப்பதன் பின்னால் மாகாண அதிகார சபையினால் எவரேனும் சேவையாளர்கள் அல்லது இயந்திரங்களை பயன்படுத்தி அல்லது ஏதேனும் தகுதியானது என கருதப்படுகின்ற முறையில் அந்த நிர்மாணிப்பை அல்லது தடையை உடனே அகற்றுவது நீதிக்குட்பட்டதாகும்.

(ஆ) அப்படியானால் நிர்மாணிப்பொன்று தடையொன்று அகற்றப்படுவதற்காக மாகாண சபையினால் அதிகாரம் கொடுக்கப்பட்ட நபர் ஒருவர் அல்லது நபரினால் தேவைப்படக் கூடிய மனித சிரமத்தையும் இயந்திரத்தையும் அல்லது மாடுகள், யானைகள் ஆகிய மிருக சிரமங்களையும் ஏதேனும் உபகரணத்தோடு அந்த இடப் பூமிக்குள் அல்லது வீட்டிற்குள் அல்லது கட்டிடமொன்றிற்குள் உட்புகுவது அல்லது அவ்வாறு உட்புகுந்து அதைப்போல அகற்றுவது அல்லது நீக்குதலுக்காக அவசியப்படக் கூடிய சகல செயல்பாடு களையும் செய்வது சட்டத்திற்குட்பட்டதாகும்.

*குற்றவாளிக ளுக்கு தண்டனை விதித்தலும் செலவினை அறவிடலும்*

(இ) அவ்வாறு செயல்படும் போது ஏதேனும் தடையை ஏற்படுத்துகின்ற நபர் ஒருவர் குற்றத்திற்கு குற்றவாளியாக்கப்படும் போது பத்தாயிரம் ரூபாவிற்கு குறையாத ஒரு இலட்சம் ரூபாவுக்கு கூடாத அல்லது இரண்டு வருடங்களுக்கு கூடாத இரண்டு முறையிலும் ஒரு முறையில் சிறைத் தண்டணைக்கு அல்லது அவ்விரண்டு தண்டணைக்கும் உட்படுதல் வேண்டும்.

(ஈ) அவ்வாறு அகற்றும் போது மாகாண அதிகார சபையினால் செய்யப்படுகின்ற சகல செலவுகளையும் அந் நிர்மாணிப்பு தடை அல்லது அவற்றிற்குரிய பொருட்கள் உபகரணங்கள், இயந்திரங்கள், கட்டிடங்கள் ஆகியவற்றை விற்பதன் மூலம் அறவாக்கிக் கொள்வது நீதிக்குட்பட்டதாகும்.

(உ) அவ்வாறு அறவாக்கி கொள்ள முடிந்த போது அந்த நஷ்டத்தை தண்டமாக உரியவர்களிடம் அறவிட்டு கொள்வதற்காக நீதிமன்ற கட்டளை ஒன்றை பெற்றுக் கொள்ளல்

## VIII வது பகுதி

*மாகாண அதிகார சபைகளுக்கிடை யில் முரண்பாடு களை இணக் கப்படுத்தல்.*

48. (1) மாகாண அதிகார சபை வேறு மாகாண சபையினால் அனுமதிக்கப்பட்ட சாசனம் ஒன்றின் மூலம் அமைக்கப்பட்ட மாகாண அதிகார சபைகளுக்கு இடையில் அச் சாசனத்தின் அதிகாரங்களை செயற்படுத்தும் போது ஏற்படுகின்ற முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான முரண்பாடு தொடர்பான கட்சிக்காரர்களின் ஒருமைப்பாட்டிற்கேற்ப கீழ் குறிப்பிடப்படும் முறையில் மூன்று பேரைக் கொண்ட இணக்க சபையொன்று நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

(அ) முரண்பாடு நிலவுகின்ற மாகாண அதிகார சபைகளின் மூலம் இணக்கப்பாட்டாளர் ஒருவர் வீதம் நியமித்துக் கொள்ளல் வேண்டும்.

(ஆ) மூன்றாவது இணக்கப்பாட்டாளர் மேலே (அ) உப பிரிவிற்கமைய நியமிக்கப்படுகின்ற இணக்கப்பாட்டாளர்கள் மத்தியஸ்தர்களாக செயற்படுவார்கள்.

(2) முதலாவது உப பிரிவிற்கமைய நியமிக்கப்படுகின்ற இணக்கப்பாட்டாளர்களின் முடிவுகள் மூலம் உரிய மாகாண அதிகார சபைகளுக்கிடையில் முரண்பாடுகள் தீர்க்கப்படல் வேண்டும்.

*கழிவுப் பொருட்கள் சம்பந்தமாக மாகாண அதிகார சபைக்கு அனுமதி வழங்குதல்.*

49. (1) இச் சாசனத்தின் சித்தாத்தங்கள், குறிக்கோள்கள் செயற்படுத்தும் காரியத்திற்காக அதிகார சபையின் எல்லைக்குள் பதிவாளரிடம் ஒப்படைக்கப்படுகின்ற எழுத்து மூலமான அறிவித்தல் மூலம் 14 நாட்களுக்குள் அல்லது அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற அதனை விட நீண்ட காலங்களுக்குள் அச்சூழலில் நடைமுறைப்படுத்தி வருகின்ற ஏதேனும் உற்பத்தியொன்று கைத்தொழில் அல்லது வியாபார சம்பந்தமான அல்லது அச் சூழலில் வெளிப்படுத்துகின்ற அல்லது வெளிப்படுத்துவதற்கு இடமுள்ள அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட கழிவுப் பொருட்கள் சம்பந்தமான மாகாண அதிகார சபைக்கு தகவல் வழங்கும் படி இப் பதிவாளருக்கு பணிப்புச் செய்ய முடியும்.

*தகவல்களின் இரகசியத் தன்மை.*

(2) முதலாவது உப பிரிவின் கீழ் செய்யப்படும் ஏதேனும் தீர்மானங்களுக்கு அமைய வழங்கப்பட்ட சகல தகவல்களும் மாகாண சுற்றாடல் அதிகார சபையினால் மிக இரகசியமாக கருதப்படுவதுடன் 3வது உப பிரிவின் கீழ் இந்த மசோதாவின் கீழ் செய்யப்படும் யாதேனும் குற்றத்திற்கு ஏதேனும் வழக்குத் தொடரும் காரியம் சம்பந்தமாக நீதிமன்றம் தவிர அத் தகவல் வேறு நபருக்கு வெளிப்படுத்தக் கூடாது.

(3) 1வது உப பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஏதேனும் ஒரு பணிப்புக்கியைய மாகாண சுற்றாடல் அதிகார சபைக்கு வழங்கப்பட்ட ஏதேனும் ஒரு வெளியிடப்பட்ட தகவலை வழங்குகின்ற அல்லது கூறுகின்ற நபர் தான் குற்றவிருத்திக்கு உட்படுவதற்கு இடமுள்ளதென அத் தகவலை வழங்குகின்ற அல்லது வெளியிடுகின்ற சந்தர்ப்பத்தில் எதிர்ப்பை காட்டியிருக்குமானால் இச் சட்டத்திற்குட்பட்டு ஏதேனும் குற்றம் சம்பந்தமாக அந் நபருக்கு விரோதமாக ஏதேனும் வழக்கொன்றில் சாட்சியாக தேவைப்படக் கூடாது.

*காணிக்குள் அல்லது பரப்புக்குள் உட்பட்டு சோதனையிடும் அதிகாரம் செயலாளருக்கு உள்ளதென.*

50. (1) மாகாண அதிகார சபையின் தலைவரினால் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியோகத்தரினால் ஏதேனும் ஒரு நேரத்தில் ஏதேனும் ஒரு காணிக்குள், பரப்புக்குள் உட்பட்டு -

(அ) ஏதேனும் உபகரணம் அல்லது தொழில்நுட்ப சூழலை பரிசீலனை செய்தலும் , சோதனை இடலும்

(ஆ) அவ் உபகரணங்களால் அல்லது கைத்தொழில் சுற்றாடலுக்கு வெளியே செய்யப்படுகின்ற, அகற்றப்படுகின்ற அல்லது சேமிக்கப்படுகின்ற அல்லது சாதாரணமாக வெளியே அகற்றப்படுகின்ற அல்லது சேமிக்கின்ற தரத்தினரின் அல்லது வகுப்பினராக செயற்படுவது ஏதாவதொரு ஊழலை செய்தவர்களை மாதிரியாகக் கொள்ளல்.

(இ) அந்த உபகரணம் அல்லது கைத்தொழில் சூழல் செயற்பாட்டிற்கு அல்லது உரிய பாவனைக்கு அல்லது அந்த உபகரணத்தின் அல்லது கைத்தொழில் சுற்றாடலுக்கு வெளியே அகற்றப்படுகின்ற அல்லது சேமிக்கப்படும் உரிய சம்பவ அறிக்கை அல்லது பதிவுகளை பரிசீலனை செய்தல்

(ஈ) அந்த உபகரணத்தின் அல்லது கைத்தொழில் சுற்றாடலின் புகைப்படம் எடுத்தல் அல்லது அவசியமென தாம் கருதும் பரிசீலனையை நடைமுறைப்படுத்துகையில் காணப்படும் சம்பவப் புத்தகங்களின் அறிக்கைகளை அல்லது அறிக்கைகளின் பிரதிகளை எடுத்தல்.

(உ) அத்தகைய சுற்றாடலுக்குள் அல்லது அத்தகைய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துகின்ற அத்தகைய வியாபாரத்தின் கைத்தொழிலில் அல்லது காரியங்களில் பாவிக்கப்படுகின்ற பாவிக்க முடிந்த அல்லது சாதாரணமாக பாவிக்கப்படுகின்ற பாவிக்க கூடிய அல்லது சாதாரணமாக பாவிக்கப்படுகின்ற ஏதாவது எரிபொருள் சொத்துக்களை அல்லது திரவியத்தில் மாதிரியாக கொள்ளல்.

(2) முதலாவது உப நியதிப்படி அத்தகைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகையில் ஏதாவது கடினமான தடைகள் ஏற்படுவதாக செயலாளருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அல்லது நியாயமான காரணம் வெளிப்படும் வேளையில் அவருக்கு பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு வருடன் ஏதாவது இடத்திற்கு அல்லது நிலையத்திற்குள் உட்புக முடியும்.

(3) முதலாவது உப பிரிவுக்குட்பட்டு அத்தகைய சோதனையை ஆய்வு செய்கையில், தரவுகள் தொகுக்கப்படுகையில் அல்லது மாதிரிகள் எடுக்கப்படுகையில் மாகாண அதிகாரசபை செயலாளர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரினால் அல்லது தவிர்க்க முடியாத நிலையில் மாகாண சபை செயலாளருக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு இடையூறு விளைவிக்கப்படுகின்ற எவரேனும் ஒருவர் இச்சட்டத்தின் அடிப்படையில் குற்றத்திற்கு குற்றவாளியாக வேண்டும். — பரிசோதனைக்கும் பரிசீலனைக்கும் தடையாக இருப்பது குற்றமாகுமென

51. (1) சுற்றாடலுக்கு பாதிப்பு ஒன்றை அல்லது அனர்த்தம் ஒன்றை ஏற்படுத்தும் அல்லது ஏற்படுவதற்கு இடமுள்ள ஏதேனும் அபிவிருத்தி செயல் திட்டம் ஒன்றுஅபிவிருத்தித் திட்டம் ஒன்றில் ஈடுபட்டுள்ள அல்லது ஈடுபடுவதற்கு அண்மித்த எவரோ ஒருவரிடம் அந்தப் பாதிப்பை அல்லது அனர்த்தத்தை தடைசெய்கின்ற அல்லது நிறுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் சம்பந்தமாக கட்டளை பிறப்பிப்பதற்காக மாகாண அதிகார சபைக்கு அதிகாரமுள்ளதோடு அந்தக் கட்டளைக்கமைய செயல்படுவது நபரின் கடமையாகும். — மாகாண அதிகார சபையினால் கட்டளைகள் பிறப்பிக்கப் படவேண்டுமென

(2) முதலாவது உப பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளைகள் எதற்கும் அமைய செயல்படுவது எவரேனும் ஒருவரினால் தவிர்க்கப்படும் ஒரு சந்தர்ப்பத்தில் அக் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள படிமுறைகளை அந் நபரினால் எடுத்துக் கொள்ளும் வரை மஜிஸ்திரட்டினால் மாகாண அதிகார சபையினால் செயல்படுகின்ற வேண்டுகோளின் அடிப்படையில் அச் செயல்திட்டத்தை அல்லது அபிவிருத்தி திட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு கட்டளையிட முடியும். — மாகாண அதிகார சபையின் கட்டளைகளை செயல்படுத்தாத விடத்து அபிவிருத்தி திட்டத்தை இடை நிறுத்தல்

52. (1) வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படுகின்ற அறிவித்தலின் மூலம் விடயப் பொறுப்பு அமைச்சரினால் அரசியல் யாப்பு புதிய அட்டவணை I வது பட்டியலில் II வது அத்தியாயத்தின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு பிரதேச (இங்கே இதன் பின்னர் பாதுகாப்பு பிரதேசம் என குறிப்பிடப்படுகின்ற) சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்த முடியும். — சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப் படுத்தல்.

(2) ஒரு பிரதேசத்தை பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தும் I வது பிரிவிற்கு உட்பட்ட பணிப் பொன்றின் மூலம் அப்பிரதேசத்தை அடையாளம் இட்டு வரையறை செய்வதன் மூலம் எல்லையாக பணிக்க முடியும்.

53. (1) ஏதேனும் பிரதேசமொன்றில் 52(1) பிரிவின் கீழ் பாதுகாப்பு பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படுகின்ற பணிப்பின் மூலம் விடயப் பொறுப்பு அமைச்சரினால் இச்சாசனத்தின் சட்டவிதிகள் எவற்றுடனும் முரண்படுகின்ற சட்டத்தின் சட்ட விதிகளுக்கு உட்பட்டு அப் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் ஏதேனும் திட்டம் அபிவிருத்தி திட்டம் அல்லது கைத் தொழில் ஒன்று அப் பிரதேசத்திற்கு செயல்படுவதை நிறுத்தப்பட வேண்டும் என பிரகடனப்படுத்த முடியும். — பாதுகாப்பு பிரதேசத்திற்குள் வேறு ஏதேனும் சட்டம் உரியதாதல்

(2) 1 வது உப பிரிவுக்குட்பட்ட பணிப்பொன்றை அதிகாரமொன்றை நடைமுறைப்படுத்தும் காலம் வரை இச் சாசனத்தின் சட்ட திட்டங்களுக்கமைய அப் பிரதேசத்தின் பௌதீக திட்டமிடல் உருவாக்கம் தொடர்பாக மாகாண அதிகாரசபை பொறுப்புக் கூறுதல் வேண்டும். 1வது குறிப்பிட்டுள்ள சட்டதிட்டங்களில் எவ்வாறாயினும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற பணிப்புகளினூடாக குறிப்பிடப்பட்டுள்ள யாதாவது ஒரு தினத்திலிருந்து அமுலாகும் வண்ணம் மாகாண அதிகாரசபை அப்பாதுகாப்புப் பிரதேசத்திலே திட்டமிடல் அபிவிருத்தித்திட்டங்கள் சம்பந்தமாக பொறுப்புவகிக்க வேண்டும் என மாகாண அதிகாரசபையின் வேண்டுகோளின்படி குறித்த அமைச்சரினால் காலத்திற்குக் காலம் பிரகடணம் செய்ய முடியும்

(3) 1 வது நியதிப்படி குறிப்பிடப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் எவ்வாறாயினும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விதிமுறைகளினூடாக விதந்துரைக்கப்பட்டுள்ள ஏதாவது ஒரு தினத்திலிருந்து நடைமுறைக்கு வரும் வரையில் மாகாண சபை அப் பாதுகாப்பு பிரதேசத்தில் திட்டமிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு நிறுத்தப்படல் வேண்டுமென மாகாண சபையின் வேண்டுகோளுக்கு புறம்பாக குறிப்பிட்ட அமைச்சரினால் முன்கூட்டியே பிரசுரிக்கப்படலாம்.

(4) பாதுகாப்பு பிரதேசத்திற்குறிய 52வது பிரிவின் கீழான சட்டமொன்று அதிகாரமுள்ளதாக இருக்கும் வரை மாகாண அதிகார சபை தவிர்ந்த வேறு எவராலும் அப் பாதுகாப்பு பிரதேசத்தினுள் திட்டமிடல் உருவாக்கமும் அபிவிருத்தி தொடர்பான அதிகார செயற்பாடுகளும் வேறு கருமங்களும் செயற்படுத்துவதும் நடைமுறைப்படுத்துவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

54. மாகாண அதிகார சபையினால் -

சுற்றாடல் மாசுபடுத்தல் பரிசீலனை உத்தியோகத்தர் நியமணம்

(அ) இச் சாசனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உண்மையான நியதி ஆய்வினை மேற்கொள்வதற்காக இரசாயன பகுப்பாய்வாளர்களால் சுற்றாடலில் கழிவுப் பொருட்கள் சேர்ந்துள்ளதாகவும் அக் கழிவுப் பொருட்களினளவும் தன்மையும் (சுற்றாடலில்) அவை ஏற்படுத்தும் தாக்கங்களையும் பரிசீலிக்கப்பட்ட அறிக்கைகளையும் பரிசீலனை செய்வதினூடாக சுற்றாடல் மாசுபடலை தடுப்பதற்காக தேவையான அதிகாரிகளை நியமித்துக் கொள்ள முடியும்.

55. (1) 5வது உப பிரிவின் கீழ் மாகாண அதிகார சபையினரால் பிறப்பிக்கப்படும் பணிப்புரையின் ஊடாக அல்லது நிகழ்வுகள் ஏதேனும் மாகாண சபை ஏதாவது திணைக்களத்திற்கு கூட்டுதாபனத்திற்கு யாப்பு சபைகளுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அல்லது யாராயினும் ஒரு உத்தியோகத்தருக்கு அதிகாரத்தை பெற்றுக் கொடுக்க முடியும்.

வழங்கப் பட்டிருந்தாலும் செயல்படுத்த முடியாத அதிகாரங்களை செயல்படுத்துதல்

(2) 1வது உப நியதியின் கீழ் மாகாண அதிகார சபையால் ஏதாவது அதிகாரம் மாகாண சபைக்குட்பட்ட ஏதாவது திணைக்களத்திற்கு கூட்டுதாபனத்திற்கு யாப்பு சபைகளுக்கு உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அல்லது யாராவது உத்தியோகத்தருக்கு அதிகாரம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அந்த அதிகாரங்கள் எவற்றையேனும் மாகாண அதிகார சபையின் செயலாளரினாலே செயல்படுத்தப்பட்டிருக்குமானால் அவரினால் செயல்படுத்தப்பட முடிந்த அதிகாரங்களில் செயலாளரினால் செயல்படுத்த முடிந்த ஏதேனும் அதிகாரங்கள், சந்தர்ப்பத்திற்கேற்ற வகையில் அம் மாகாண சபை திணைக்களம் கூட்டுதாபனம் சட்டவாக்கப்பட்ட சபையின் அல்லது மாகாண அதிகார நிறுவனத்தின் எவரேனும் உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது அவ் உத்தியோகத்தரினால் செயல்படுத்த முடியும்.

(3) சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும் இச் சட்ட மூலத்தின் சட்டவிதிகளை பயன்படுத்துவதற்குமுள்ள மாகாண அதிகார சபைக்குரிய ஏதேனும் பொறுப்பொன்றிற்கு அல்லது அதிகாரமொன்றிற்கு இப்பிரிவில் உள்ள ஏதாவது தடையாக இருத்தல் கூடாது.

(4) முதலாவது உப பிரிவிற்குட்பட்டு செய்யபடுகின்ற பணிப்பு ஒன்று மாகாண அதிகார சபையினால் செய்விக்கப்படும் சந்தர்ப்பத்தில் செய்யப்படுதல் அல்லது மாற்றம் செய்யப்படுதல் செய்ய முடியும்.

(5) மாகாண சபையினால் முதலாவது உப பிரிவிற்குற்பட்டு

நிறுவனம் ஒன்று அல்லது நபர் ஒருவர் சம்பந்தமாக பணிப்பொன்றை தயாரித்தல்

(அ) விடயப் பொறுப்பு அமைச்சரின் ஒருமைப்பாட்டுடன் தவிர எவையேனும் நிர்வாக நிறுவனமொன்றிற்கு அல்லது ஏதேனும் மாகாண சபை திணைக்களமொன்று அல்லது நிறுவனம் ஒன்று அல்லது உத்தியோகத்தர் சம்பந்தமானவிடத்து அம்மாகாண சபைத் திணைக்களம் நிறுவனம் அல்லது உத்தியோகத்தருக்கு பொறுப்பான மாகாண அமைச்சரின் ஒருமைப்பாடின்றி பணிப்பொன்றைச் செய்யக்கூடாது.

மாகாண அதிகாரியின் உத்தியோகத்தர்கள், சேவையாளர்கள், அரச சேவையாளர் எனக் கருதப்பட வேண்டும் என

56. மாகாண சபையின் சகல அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்கள், சேவையாளர்கள் தண்டனை நீதிக் கோவையில் கருத்திற்கமைய அதன் கருமங்களுக்காக அரச சேவையாளர்களெனக் கருதப்படல் வேண்டும்.

57. மாகாண அதிகார சபை இலஞ்ச சட்டமூலத்தின் பொருளிற்கிணங்க உப அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றென கருதப்படுவதுடன் அச் சட்ட மூல சட்ட விதிகளுக்கமைய விளங்கிக் கொள்ள வேண்டும். அதிகார சபையின் இலஞ்ச சட்டமூலத்தின் சந்தர்ப்பத்திற்கு உகந்ததாக உபபட்டியல் படுத்தப்பட்ட நிறுவன மாக கருதப்பட வேண்டுமென.

58. (1) வேறு ஏதேனும் எழுத்திலாலான சட்ட விதிகளுக்கு முரணாக எவை குறிப்பிடப்பட்டிருந்தாலும் இச் சாசனத்தின் சட்ட விதிகள் வட மத்திய மாகாணத்திற்குள் அதிகாரம் கொண்டதாக இருத்தல் வேண்டும். மேலும் இச் சாசனத்தின் சட்ட விதிகள் அதன் வேறு எழுத்திலாலான சட்ட விதிகளாவதோடு ஏதேனும் முரண்பாடொன்று நெறியற்ற முறையொன்று ஏற்படுமிடத்து இச் சாசனத்தின் சட்ட விதிகள் வட மத்திய மாகாணத்திற்குள் அந்த வேறு எழுத்து மூலமான சட்டத்தின் சட்ட விதிகளை மீறிய அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

(2) எவ்வாறானாலும் இலங்கை அரசின் பாராளுமன்ற சட்டமூலத்திற்குட்பட்டு தற்போது நடைமுறைப்படுத் தப்பட்டு வருகின்ற அல்லது எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தக் கூடிய செயல் முறைக்கு தடையில்லாமல் இருக்க அல்லது அது மிகவும் பிரயோசனமுடையதாக இருக்கும் என விடயப் பொறுப்பு அமைச்சர் கருதும் சந்தர்ப்பத்தில் இக் கட்டளைச் சட்டத்தின் அதற்குரிய சட்டவிதிகள் அல்லது பூரணமான சாசனத்தை செயல்படுத்தல் தற்காலிகமாக அல்லது திகதி குறிப்பிடப்படாமல் இடை நிறுத்துவதற்கு விடயப்பொறுப்பு அமைச்சருக்கு முடியும். இச் சாசனத்தி ற்குட்பட்ட அல்லது மாகாண அதிகாரசபையின் சட்ட விதிகளை நடைமுறைப் படுத்தல் அல்லது இடை நிறுத்தல்

(3) அவ்வாறு இடை நிறுத்தப்படுமிடத்து அல்லது அந்த இடைநிறுத்தப் பணிப்பை நீக்குமிடத்து அது சம்பந்தமாக வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சிங்களம், தமிழ் ஆங்கிலம் மூன்று மொழிகளிலும் வெளிவருகின்ற தினசரி பத்திரிகைகளின் ஆகக் குறைந்ததாக ஒன்று வீதம் வெளியிடப்படல் வேண்டும். அவ்வாறு இடை நிறுத்துவது பிரகடனப்படுத்தல்

59. (1) (அ) இச் சாசனத்திற்குட்பட்டு மாகாண அதிகார சபையினால் மனச்சாட்சி ரீதியாக செய்யப்பட்ட அல்லது செய்யப்படும் எனக் கருதப்படும் ஏதேனும் செயற்பாடுகள் சம்பந்தமாக அதிகார சபைக்கு எதிராக அல்லது

ஆ. இச் சாசனத்திற்குட்பட்டு அல்லது மாகாண அதிகார சபையின் விதிகளின் படி அதிகார சபையின் சுற்றாடல் ஆலோசனை சபையின் அல்லது சுற்றாடல் துணை நிறுவனமொன்றின் அங்கத்தவர்கள் அல்லது மாகாண அதிகார சபையின் உத்தியோகத்தர் ஒருவர் அல்லது சேவையாளர் ஒருவரால் மனச்சாட்சிக்குட்பட்டு நீதியாக செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்படும் இச் செயற்பாடு ஒன்று சம்பந்தமாக அவ் அங்கத்தவர்களுக்கு உத்தியோகத்தர்களுக்கு அல்லது சேவையாளருக்கு எதிராக எவ்வித குற்ற வழக்கொன்றும் தொடரக் கூடாது.

(2) ஏதேனும் நீதிமன்றம் ஒன்றின் முன்னால் மாகாண அதிகார சபையினால் அல்லது மாகாண அதிகார சபைக்கு எதிராக தொடரப்பட்ட சிவில் அல்லது குற்றவியல் வழக்கொன்று சம்பந்தமாக மாகாண அதிகார சபையினால் செய்யப்படுகின்ற செலவொன்று மாகாண அதிகார சபையின் நிதியத்திலிருந்து வழங்கப்படுவதுடன் அவ்வாறான ஏதேனும் சிவில் குற்றவியல் வழக்கொன்றில் மாகாண அதிகார சபையிடம் வழங்கப்படுகின்ற அல்லது மாகாண அதிகார சபையினால் அறவிடப்படுகின்ற ஏதேனும் கட்டணமொன்று மாகாண அதிகார சபையின் நிதியத்தில் வைப்புச் செய்யப்பட வேண்டும். வழக்குக் கட்ட ணம் அதிகார சபையின் நிதியத்திலிருந்து வழங்கப்படுவதுடன் கிடைக்கும் பணம் அந்த நிதியத்திற்கு வைப்புச் செய்யப்படு வென

*மாகாண அதிகார சபையின் கட்டளைப் படி நியாயமாக நடந்து கொண்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு விதிக்கப்படும் தண்டனைக்காக செயல்படும் விதம்*

(3) 1வது உபபிரிவின் ஆ பந்தியில் குறிப்பிடப்பட்ட எவரேனும் ஒருவரினால் இச் சாசனத்திற்குட்பட்டு அல்லது மாகாண அதிகாரி சபையின் கட்டளைக்கு வெளியே செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாக கருதப்படும் ஏதேனும் செயல் சம்பந்தமாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னால் அவருக்கு உத்தியோகத்தர் விரோதமாக தொடரப்பட்ட ஏதேனும் சிவில் அல்லது குற்றவியல் வழக்கொன்றின் அவரினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏதேனும் செலவினமொன்று அச் செயல் மனச்சாட்சிக்கு ஏற்ப செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்மானித்தால் அச் செலவினை அவரினால் அந்த சிவில் அல்லது குற்றவியல் வழக்கில் அறவிடப்பட்டிருந்தால் மட்டும் மாகாண அதிகார சபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட வேண்டும்.

*சாசனத்திற்கமைய சட்டங்களையும் சட்டதிட்டங்களையும் மீறுபவர்களுக்கு தண்டனை விதித்தல்*

60. இச் சாசனத்திற்கு அமையுள்ள பணிப்புகள் அல்லது அதற்குட்பட்டு செய்யப்பட்டுள்ள ஏதேனும் கட்டளை அல்லது சட்ட விதிகளை மீறுவது சம்பந்தமாக அல்லது அச் சட்டவிதிகளுக்கு அல்லது கட்டளைகளுக்கு அமைய மீறிச் செயற்படுவது சம்பந்தமாக அல்லது விதிக்கப்படும் தண்டனைக்காக சட்ட விதிகள் அமைக்கப்படாத சந்தர்ப்பத்தில் மீறுவதும் கவனியாது விடுகின்ற சகல நபர்களும் குற்றத்திற்கு குற்றவாளியாவதோடு மெஜிஸ்திரேட் முன்னிலையில் குற்றவாளியாக்கப்படும் போது 2 வருடத்திற்கு மேற்படாத இரு முறையிலும் ஒரு முறையில் சிறைச்சாலையில் இடப்பட அல்லது பத்தாயிரத்திற்கு மேற்படாத தண்டமொன்றிற்கு அல்லது சிறைச்சாலையில் இடப்படுவதோடு தண்டம் எனும் இரு தண்டனைக்கும் அவர் உட்படல் வேண்டும்.

*விடயப்பொறுப்பு அமைச்சரினால் கட்டளை செய்ய முடியும்*

61. (1) பணிக்கப்பட முடியுமென சாசனத்தில் வெளியிடப்பட்ட அல்லது குறிப்பிட்ட அல்லது இச் சாசனத்தில் கட்டளைகளை தயார் செய்வதற்கு தேவையான சகல காரணங்களும் சம்பந்தமாக விடயப் பொறுப்பு அமைச்சரினால் கட்டளைகளை உருவாக்க முடியும்.

(2) விஷேசமாக 1வது பிரிவில் சொல்லப்பட்ட அதிகாரப் பரவலுக்கு பாதகமில்லாமல் கீழே காட்டப்படும் காரணங்கள் சகலதுக்கும் அல்லது அதன் எவையேனும் ஒன்று சம்பந்தமாக விடயப் பொறுப்பு அமைச்சரினால் கட்டளைகளை ஆக்க முடியும் :-

(அ) (1) நிர்மாணம் அல்லது இணைத்தலுக்கு அல்லது முன்மொழியப்பட்ட நிர்மாணம் அல்லது இணைத்தலுக்கு நில அளவை வரைப்படத்துடன் தகவல்களை பரிசீலனை செய்தல்.

(2) இச் சட்ட மூலத்திற்குட்பட்டு அனுமதி பத்திரம் அல்லது ஏதேனும் சட்ட விதியொன்றை வெளியிடல்.

(3) தேவையான காரணங்களை பரிசீலனை செய்வதோடு நடைமுறைப்படுத்தல் சம்பந்தமாக கட்டணங்கள் அறவிடல்.

(ஆ) ஏதேனும் தேசிய அல்லது மாகாண சுற்றாடல் கொள்கை ஒன்றை செயல்படுத்துவது அல்லது சூழலை பாதுகாத்தலுக்காக பயனுள்ளதாக பயன்படுத்திக் கொள்ளவும் பாதுகாத்துக் கொள்ளவும் வகைப்படுத்தல் சம்பந்தமாக தர அல்லது தேவையை வெளிப்படுத்துதல்.

(இ) ஏதேனும் பொருளொன்று அல்லது ஏதாவது விஷமுள்ளதாக விரும்பத்தகாததாக நாற்றமுள்ளதாக சுகாதாரத்திற்கு பாதகமேற்படுத்த கூடியதாக இல்லாதவிடத்து இச்சாசனத்தில் வேறு ஏதாவது விபரம் உட்படுமா எனும் முறையை நிச்சயப்படுத்தும் போது தரம் அல்லது உபமானங்கள் காட்டுதல்.

(ஈ) கனமான அல்லது வாயுவாகின்ற ஏதேனும் பொருளொன்று அல்லது கதிரியக்கப் பொருட்கள் ஏதேனும் சூழலுக்கு அப்புறப்படுத்தல், வெளியேற்றுதல் அல்லது அங்கே சேகரித்து வைத்தல், தடை செய்தல் ஏதேனும் குறிப்பிட்ட எரிபொருளொன்றின் பாவனையை தடை செய்தல் அல்லது அதனை முறைப்படுத்தல்.

(உ) அயலில் உள்ள வாயுக்களின் பண்புத்தரம் வெளியேறும் தரத்தை காட்டுதல், வளிக் கோளத்தில் இருக்க கூடிய அல்லது வளி கோளத்தால் வெளியேற்றக் கூடிய ஏதேனும் ஒரு பொருள் ஒன்று சேர்வதை உயர்ந்தளவில் இடமளிக்கக் கூடிய அளவினை காட்டுதல்

(ஊ) மாசடைவதற்கு உரிய ஏதேனும் இயந்திரம் அல்லது உபகரணம் வசதிகள் வாகனமொன்று அல்லது வள்ளமொன்று பாவித்தலை தடை செய்தல், இல்லாதவிடத்து மாசடைதலை தடுத்தல், அல்லது குறைத்தல், உண்டாகும் படி அவற்றை கட்டுதல், பூட்டுதல் அல்லது செயல்படுத்தல், என்பவற்றை முறைப்படுத்தல்.

(எ) மாசடைவது சம்பந்தமான ஆபத்தை முன் அறிவிப்புச் செய்தல் அல்லது கவனமாக இருப்பதற்கான அறிவித்தல்களை வெளியிடுவதற்கான தேவை

(ஏ) குப்பை அல்லது இலகுவாக எரிக்கக்கூடிய வேறு பொருட்கள் எரித்தலை தடை செய்தல் அல்லது முறைப்படுத்தல்

(ஐ) பூமியின் மேல் அல்லது உள்ளே கனமான நீர் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்கான நிலையங்களை அமைத்தல் முறைப்படுத்தல்

(ஒ) தாக்கத்தை ஏற்படுத்தும் சத்தங்கள் யாவை என நிச்சயித்தல் அல்லது மத்திய அளவிலான சத்தம் சம்பந்தமாக தரத்தை கணித்தல் வெளிப்படுத்தல்.

(ஓ) சுகாதாரத்திற்கு, சமூக நலனுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய அல்லது பிரதி விரோத கலாசார தாக்கம் ஏற்படக் கூடிய இல்லாதவிடத்து மாசடைதலை தடுப்பதற்காக ஏதேனும் நீர் நிலையில் அல்லது அயலில் குளித்தல், நீந்துதல், வள்ளம் ஓட்டுதல் அல்லது வேறு கருமங்களை செய்வதை தடை செய்வது அல்லது முறைப்படுத்தல்.

(ஔ) எண்ணெயுடனான வெளியேற்றத்தை குறைத்தல் அல்லது தடுத்தல் செயல்பாட்டிற்காக பணிக்கப்படக் கூடிய ஏதேனும் உபகரணம் ஒன்று வியாபார செயல்களை செய்து கொண்டு போகின்ற எண்ணெய் சுத்திகரிப்பினால் இணைக்கப்படக்கூடியதென பணித்தல்.

(க) மாகாண அதிகார சபையினால் செய்யப்படுகின்ற நிச்சயிக்கப்படுவதற்கு விரோதமான மீள் விண்ணப்பங்களுக்கு பொருத்தமான செயல் முறையை தீர்மானித்தல்.

(கா) நகர பிரதேசங்களையும் கிராம பிரதேசங்களையும் ஒளிமயமாக்குவது சம்பந்தமான காணிகள், பாதைகள், கட்டடங்கள், புனிதமாக்கலும் அலங்காரம் என்பவற்றை சிறந்த முறையில் பேணுவதற்கான சட்ட விதிகளையும் அறிவித்தல், காட்சிப்படுத்தல்,முறைப்படுத்தல் காணிப் பாவணை துண்டுப்படுத்தல் சம்பந்தமாக செயல்முறையொன்றை விதித்தல்

(கி) உப திரவமான பொருட்களை களஞ்சியப்படுத்தலும் கொண்டு செல்லல்

(கீ) வளி கோலத்திற்கு, நீர் மூலத்திற்கு மண்ணுக்கு அல்லது கழிவுப் பொருட்கள் உப திரவமான பொருட்களை அகற்றுதல்

(கு) மர நடுகை வெட்டுதல், வீட்டுத்தோட்டம், சேரி முடுக்கு, பயிர் செய்தல், மரக் கூட்டங்களை அமைத்தல், மரங்களை பாதுகாத்தலோடு பேணி வருதல்.

(கூ) அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரினால் தற்காலிகமாக அதிகாரம் கொடுக்கப்பட்ட குறிப்பிட்ட பங்குதாரர்களினால் குறிப்பிட்ட சுற்றாடல் காரணிகளை பரிசீலனை செய்வதற்கும் நிலைநாட்டுவதற்கும் பணித்தல்.

(3) விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயார் செய்யபடுகின்ற சகல கட்டளைகளும் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படுவதோடு அவ்வாறு வெளியிடப்பட்ட திகதியில் அல்லது கட்டளைகளில் குறிப்பிடப்படக் கூடிய ஏதேனும் பின்னொரு திகதியில் அது செயல்பட வேண்டும்.

விடயப் பெறுப்பு அமைச்சரின் கட்டளைகளை வர்த்தமானி அறிவித்தலில் வெளி யிடலும் செயற்படுத்தலும்

(4) விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயார் செய்யப்படுகின்ற சகல கட்டளைகளையும் அவற்றை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டதன் பின்னர் அனுமதிக்காக மாகாண சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்படாத சகல கட்டளைகளும் அங்கு அனுமதித்த திகதியிலிருந்து அதிகாரம் அற்றதாவதற்கு முன் செயல்படுத்தப்பட்டு இருக்குமானால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எவறிற்கும் பாதிப்புகள் ஏற்படக் கூடாது. கட்டளையொன்று அவ்வாறு அதிகாரமற்றதாக்கப்பட்டு முன் செயல்படுத்தப்பட்டிருக்குமானால் கருதப்படும் திகதி சம்பந்தமாக அறிவித்தல் ஒன்று வர்த்மானியில் வெளியிடப்பட வேண்டும்.

62. சொல்லொன்று சம்பந்தமாக வேறு கருத்தொன்று தேவைப்படுமானால் அதற்காக கீழேயுள்ள வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தவும்:-

நீதிமன்றத் தீர்வின் அடிப்படையில் செலவு ஏற்றுக் கொள்ளலும் அறவிடுதலும்.

சுற்றாடல் ஒலி - என்பது காணி நீர் மண் வளிக்கோளம் காலநிலை துர்நாற்றம் சுவை சுவையோடு சகல விதமான விலங்குகளினதும் சுற்று சூழல் பௌதீக காரணிகளாகும்.

காணி - காணி என்பது வசிப்பிடம் கட்டிடங்கள் அத்தோடு சம்பந்தப்பட்ட பகுதிகள் அல்லது சகல முறையிலான பதிவற்ற பூமியும் அரசினால் பெற்றுக் கொள்ளப்பட்ட காணியும் உட்படும்.

கட்டடங்கள் - என்பது வீடு, கைத்தொழில் சாலை, மதில் அல்லது எல்லா விதமான நிர்மாணங்களும் கருதப்படும்.

எதுவிதமான தண்டனைக்காக வெளியிட்டப்பட்ட சட்டத்திட்டங்கள் ஆக்கப்படாத தவறுகளுக்காக தண்டனை விதித்தல்.

உள்ளூராட்சி நிறுவனம் - என்பது மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை அல்லது அதற்காக அமைக்கப்படக் கூடிய வேறேதும் நிறுவனம் அல்லது சபை உட்படும்.

மாசடைதல் - மாசடைதல் என்பது சுற்றாடலை பிரயோசனமான முறையில் பயன்படுதிக் கொள்ள விரும்பத்தகாத வகையில் அல்லது பொது மக்களுடைய பாதுகாப்புக்கு, சுகாதாரத்திற்கு அல்லது நலநோம்பலுக்கு விரும்பத்தகாததாக அல்லது வனவிலங்குகள், பறவைகள் மீனினங்கள், மனிதர்கள் மர இளைகள், மூலிகைச் செடிகள் உட்பட சகல விதமான உயிரினங்களுக்கிடையில் ஏதேனும் ஒரு பகுதியினருக்கும் அல்லது முடிவதற்கும் அல்லது உபத்திரமாக அல்லது தடையாக அல்லது கழிவுப் பொருட்களை அகற்றுவதன் மூலம் வெளியேற்றுவதன் மூலம் மூடி வைப்பதன் மூலம், அல்லது சேமித்து வைப்பதன் மூலம், சூழலுக்கு அல்லது சுற்றாடலுக்கு ஏதேனும் ஒரு முறையில் விரும்பத்தகாத தாக்கமொன்றை ஏற்படுத்துவதாக கருதப்படும்.

ஒலி மாசடைதல் - என்பது கோபம் ஏற்படுத்துகின்ற அல்லது கஷ்டத்தை ஏற்படுத்தக் கூடிய அல்லது கேட்பதை அசௌகரியம் ஏற்படுத்துகின்ற மூலம் வேறு நாதங்கள் அல்லது சத்தத்தைக் கேட்பதற்கு தடையாகவுள்ள அல்லது கவனத்தை உடைத்தெறிகின்ற வகையிலான சத்தம் ஒன்று அல்லது நாதம் ஒன்று ஏற்படத்துதல் அல்லது ஏற்படுவதற்கு இடமளித்தல் என கருதப்படும்.

வளி மாசடைதல் - என்பது மூலிகைச் செடிகள், மர செடிகள் அல்லது வனவிலங்குகள் மனிதர்கள் உட்பட உயிர் வாழ் காரணிகளுக்கு உயிரற்ற பொருட்களுக்கு தற்காலிக பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற வளியில் பௌதீக இரசாயன உயிருள்ள தன்மைகளை மாற்றுகின்ற அல்லது உட்சுவாச வெளி சுவாசத்திற்கு தடை ஏற்படுத்துகின்ற அல்லது விரும்பதகாத துர்வாடை அல்லது புகை அல்லது விரும்பதகாத துணிக்கையுடனான வாயுக்கள், சுற்றாடலுக்கு சேர்க்கப்படுவதாக கருதப்படும்.

கழிவுப் பொருட்கள் - சுத்தப்படுத்தப்படாத மலசலம், குப்பைகூளம், மிருக கழிவுகளின், ஒரு பகுதி கைத்தொழில் அல்லது விவசாய கைத்தொழில் இரசாயன நச்சுக்கள் அல்லது அபிவிருத்தி திட்டத்திற்காக பாவணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பொருட்கள் அல்லது பொருட்களின் பகுதிகளோடு சூழலுக்கும் பொது மக்களின் சுகாதாரத்திற்கும் விரும்பத்தகாததும் வெறுக்கத்தக்கதுமான நாற்றத்துடனான வாயுப் பொருள் அல்லது புகை என கருதப்படும்.

நச்சுத் தன்மையான இரசாயன பொருட்கள் என்பது நேரடியான பொருட்கள் சம்பந்தமாக விரும்பதகாத தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அல்லது சூழலில் உபத்திரவமான மாற்றமொன்றை ஏற்படுத்தக் கூடிய திரவம் புகையெனக் கருதப்படும்.

| | |
|---|---|
| நீர்த்தேக்கங்கள் - | என்பது வட மத்திய மாகாண எல்லைக்குள் அமைந்துள்ள நதிகள் குளங்கள், நீர்த்தேக்கங்கள் , வாய்க்கால்கள், கிணறுகள், ஊற்றுக்கள் ஆகிய எவையேனும் நீர் களஞ்சியம் என கருதப்படும். |
| விடயப் பொறுப்பு | என்பது வட மத்திய மாகாண சுற்றாடல் |
| அமைச்சர் | என்பது விடயப் பொறுப்பு மாகாண அமைச்சர் என கருதப்படும். |
| செயலாளர் | என்பது மாகாண சுற்றாடல் அதிகார சபை மாகாண சுற்றாடல் ஆலோசனை சபை செயலாளர் எனும் முகாமைத்துவ பணிப்பாளர் எனும் அப் பதவியை வகிக்கின்ற உத்தியோகத்தர் என கருதப்படும். |
| தலைவர் | என்பது மாகாண சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் எனும் அல்லது அந்த கருமங்களுக்கு பொறுப்பான உத்தியோகத்தர் எனப்படும். |
| உரிய அமைச்சர் | என்பது அக்காரியங்களுக்கு பொறுப்பான அமைச்சர் என கருதப்படும். |
| செயல்பாட்டு பணிப்பாளர் | சுற்றாடல் அதிகார சபை காரியங்களை என்பது நிறைவேற்றுவதில் மக்கள் தொடர்பு, திட்டம், செயல்படுத்தல் ஆகிய கருமங்களில் தலைவருக்கு உதவியாக இருக்கின்ற முழுமையான கால செயல்பாட்டு பணிப்பாளர். |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

5 - PG 001259